www.tamilarangam.net

# சமாதானப் போர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச மா தா ன ப் போ ர்

# யுத்தம்

அன்றும் இன்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இந்த அறிக்கையை வாசிக்கும் நீங்கள் சிங்களவரா, தமிழரா, முஸ்லிமா என்பதை ஒரு கணம் மறந்து விடுங்கள். இலங்கையர் என்ற எண்ணத்துடன் அன்றைய யுத்தத்தையும் இன்றைய யுத்தத்தையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு நாம் உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.**

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடந்த 12 வருட காலமாக நடைபெற்றுவந்த அழிவுகளை, நடைபெற்று வந்த கொடூரமான யுத்தத்தை நிறுத்தி, நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் ஆணையைப் பெற்றுக்கொண்டு தான் ஆட்சிக்கு வந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதன் பிரகாரம் நாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல் எமது சக்திக்கு ஏற்றவிதத்தில் முதலாவதாக நேர்மையுடன் சமாதானத்துக்கு எம்மை அர்ப்பணித்து, வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்களை இந்தக் கொடூரமான யுத்தத்திலிருந்து மீட்டெடுத்து, மோசடி, ஊழல்களற்ற நிர்மலமான ஜனநாயக ஆட்சியொன்றைக் கட்டியெழுப்ப நாம் முயற்சி எடுத்தோம். இந்த நடவடிக்கையின் போது, எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துக்கும் சாதாரண தமிழ் மக்களுக்குமிடையே இருக்கக்கூடிய வேறுபாட்டை நாம் நன்றாகப் புரிந்து கொண்டுதான் வடபகுதிக்கு இருந்துவந்த பொருட்களின் மீதான தடையை நீக்கினோம். அப்பொருட்களில் ஒருபகுதி எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினால் இடைவழியில் பறிக்கப்பட்டது என்பதை நாம் அறிவோம். என்றாலும் வடபகுதியிலே சமாதானத்தை விரும்பும் சாதாரண தமிழ் மக்களை ஜனநாயக ஆட்சி முறைக்குள் கொண்டுவருவதே எமது தேவையாக இருந்தது. அப்பகுதி மக்களுக்குத் தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்கள் மீது நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்துவதற்கு நாம் விரும்பினோம். எமது அந்த நோக்கம் மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது என்பதை சாதாரண தமிழ்மக்கள் மத்தியிலிருந்து எமக்குக் கிடைக்கப்பெற்ற பிரதிபலிப்புக்களிலிருந்து எம்மால் தெளிவாக காணக்கூடியதாக இருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேபோன்று தென்னிலங்கையிலே பெரும்பான்மையாக வாழுகின்ற சிங்கள மக்களும்,மகாசங்கத்தினரும்,கிறிஸ்த்தவ, இந்து, இஸ்லாமிய மதத் தலைவர்களும், அந்த மதங்களைக் கடைப்பிடிக்கின்ற சாதாரண பொதுமக்களும் எமது அந்த நேர்மையான முயற்சிக்கு ஒத்தாசை நல்கி எங்களுக்கு வழங்கிய தைரியத்துக்காக அவர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்ற அதேவேளை, எமது கௌரவத்தையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்றாலும், எமது மக்களது வாழ்க்கையில் அமைதி உறுதிப்படுத்தப்படுவதை விரும்பாத,எந்நாளும்குண்டுகளினதும் துப்பாக்கிகளினதும் மரண ஓலங்களினதும் சப்தத்தைக் கேளாமல் நித்திரை செய்ய முடியாத,கொடூர மான கூட்டமும் எம்மத்தியில் இருக்கின்றது. அவர்களுக்கு யுத்தமில்லாமல் வாழ முடியாது. அவர்களுக்கு யுத்தம் இல்லாமல் அரசியல் நடத்த முடியாது. அவர்களுடைய மனோ பாவத்தை ஒரு நாளும் மாற்ற முடியாது. அவர்களுடைய மனோ நிலையை மாற்றுவது மிகவும் கஷ்டமான ஒரு காரியம். அவர்களை மீண்டும் பாடசாலைக்கனுப்பி படிப்பிக்கத்தான் முடியுமா?

இப்படியானவர்கள் எமது சிங்களச் சமூகத்தில் இருப்பதைப்போன்று தமிழ்ச் சமூகத்திலும் இருக்கிறார்கள். தமிழ்ச் சமூகத்தில் அவ்வாறு இருக்கக்கூடிய கூட்டத்தினர் தான் எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினர். யுத்தத்தை நிறுத்தி, கையில் துப்பாக்கி இல்லாமல் சாதாரண வாழ்க்கையை நடத்துவது அவர்களுக்குக் கஷ்டமான காரியம். துப்பாக்கி இல்லையென்றால் அவர்களுடைய ஆதிபத்தியம் இல்லாமல் போகும். தமிழ்மக்கள் மீது கட்டளைகளைப் பிறப்பித்து, சிற்றரசர்களைப் போல் வாழப் பழகியவர்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதில் அவர்களுக்கே கஷ்டமுண்டு.

உண்மையான சமாதானத்துக்குசிங்கள சமூகத்திலும் தமிழ் சமூகத்திலும் இருக்கக்கூடிய முக்கிய சவால், இந்த இரண்டு கூட்டத்தினரே. யுத்தத்தை வியாபாரமாக்கிக்கொண்டு தமது



அரசியலை நடாத்துவதற்காக, இனப்பிரச்சினையையும் மதப்பிரச்சினையையும் தூண்டிவிட்டு, அந்த அசுத்தத்திற்குள்ளே வாழ்ந்துகொண்டிருக்கின்ற கூட்டத்தினர் இரு தரப்பிலும் இருந்துகொண்டு கலவரங்களை ஏற்படுத்தி, நன்மையான எல்லா விடயங்களையும் நிர்மூலமாக்கி வருகிறார்கள்.

பொய்யான காரணங்களைக் காட்டிக்கொண்டு, நியாயமற்ற விடயங்களைக் கூறிக்கொண்டு எல். ரீ. ரீ. ஈ. இயக்கம் மீண்டும் ஒரு முறை யுத்தத்தை ஆரம்பித்து, சமாதானத்துக்கான நடவடிக்கைகளை அர்ப்பணிப்புடன் கொண்டு சென்ற எமது அரசாங்கத்தையும் யுத்தம் நடத்த வற்புறுத்தியுள்ளது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்த நாட்டிலே அமைதியை ஏற்படுத்துவதற்கும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நாம் மீண்டும் யுத்தம் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறோம். வடக்கு-கிழக்கிலே வாழுகின்ற தமிழ், சிங்கள், முஸ்லிம் மக்களை இந்த யுத்தத்திலிருந்து காப்பாற்றுவதற்காகவும், அந்த மக்களின் விடுதலைக்காகவும் சமாதான யுத்தமொன்றை நடாத்துவதற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த விடயங்களை எமது பாதுகாப்புப் படைகளிலே இருக்கக்கூடிய சாதாரண படைவீரரில் இருந்து உயர்மட்ட உத்தியோகத்தர் வரையிலான எல்லோரும் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தவர்களைப் போல அதற்கு வாக்களிக்காத சாதாரண மக்களும் இந்த நிலையை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

இவ்வளவு காலமாக எமது நாட்டில் நடைபெற்று வந்த யுத்தத்தில் சரியான ஒரு முடிவை மேற்கொள்ள முடியாமலிருந்த சர்வதேச சமூகமும் எமது அரசாங்கத்தின் நேர்மையான நோக்கங்களைப் புரிந்து கொண்டு இதற்கு முன் ஒருபோதும் வழங்காத அளவு ஒத்துழைப்பை எமக்குப் பெற்றுத்தருவதற்கு வாக்குறுதியளித்துள்ளது. அந்த உதவிகள் எமக்கு இப்போது கிடைத்து வருகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அர்த்தமேதுமில்லாத தமது அழிவு நடவடிக்கைகளைக் கைவிட்டு நேர்மையாகச் செயற்பட வேண்டுமென விரும்பினால், ஜனநாயக வழிக்கு வந்து தமிழ் மக்களுக்காக நன்மையான காரியங்களைச் சாதித்து, சிங்கள, முஸ்லிம் மக்களுடன் ஒன்றிணைந்து சௌஜன்யத்துடன் ஐக்கிய இலங்கைக்குள் வாழவேண்டும் என்று விரும்பினால், அதற்கான சந்தர்ப்பத்தை எல்.ரீ.ரீ.ஈ.இயக்கத்துக்கு வழங்கவேண்டியது எமது கடமையாகும். சிங்கள பௌத்த மக்கள் மாத்திர மல்ல எல்லா இனங்களையும் மதங்களையும் சேர்ந்த மக்களிடம் இருக்கக்கூடிய உயர்ந்த குணாம்சங்கள், விழுமியங்கள் காரணமாகத்தான், மோதல் தவிர்ப்பை மேற்கொள்ள முன்வந்த எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் நிலைப் பாட்டை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. அதை நாங்கள் கண்டிக்க முடியாது. அந்த நடவடிக்கைக்கு எமது பிரதி பலிப்பை நாம் எடுத்துக் காட்ட வேண்டும். அதனால் தான் சாதாரண தமிழ் மக்களுக்கு எமது நல்ல உள்ளத்தை, சிறந்த அபிலாசைகளை என்னவென்று எடுத்துக் காட்டினோம். சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக எம்மிடமுள்ள அர்ப்பணிப்புத் தன்மையைச் சொற்களில் மாத்திரமல்ல செயல் மூலமாகவும் நாங்கள் நிரூபித்தோம். அதனால் தான் அரசியல் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எல். ரீ. ரீ. ஈ. யினருக்கு நாம் யோசனையை முன்வைத்தோம். ஆனாலும், சிலர் குறிப்பிடுவதைப் போன்று எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தின் மீது முழுமையாக நம்பிக்கை வைத்து எமது பாதுகாப்புப் படையினரைப் பலவீனமடையச் செய்வதற்காக நாம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எமது பாதுகாப்புப் படைகளை எந்த நிலையையும் எதிர்நோக்கக் கூடிய விதத்தில் உஷார் நிலையில் வைத்திருந்தோம். அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளுக்கு உரிய வசதிகளைப் பெற்றுக்கொடுத்தோம். அவர்களுடைய குறைபாடுகள் என்னவென்பது பற்றி ஆராய்ந்து, அவைகளை



நிவர்த்தி செய்தோம். அரசாங்கம் மேற்கொண்டிருந்த சமாதான முயற்சிகளைப் பற்றி அவர்களுக்குப் புரிய வைப்பதற்காக பிரதிப்பாதுகாப்பு அமைச்சரைப் படை முகாம்களுக்கு அனுப்பினோம். பாதுகாப்புப் படைகளுக்கு ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், அவைகளை வெளிப் படையாகவே பேசிக்கொண்டோம். அவர்களுக்கிடையே பொறுப்புணர்ச்சியையும் நம்பிக்கையையும் நாம் ஏற்படுத்தினோம்.

கடந்த ஏப்பிறல் 19 ஆந் தேதி எல். ரீ. ரீ. ஈ. இயக்கம் ஒரு தலைப்பட்சமாக மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி யுத்தத்தை ஆரம்பித்தவுடன் தோல்வியடைந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களும், இன, மத, மொழி குப்பைக்கூழத்திலே இருக்கக்கூடிய சில பொறுக்கிகளும் 12 வருட காலத்து முழுமையான பொறுப்பைப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் மீது சுமத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். கிழக்கு மாகாணத்திலே இருந்துவந்த நிர்வாகம் அரசிடமிருந்து பறிபோனதாம்; புலிகள் இயக்கத்தின் பேச்சுக்களைக் கேட்டு அரசாங்கம் ஏமாந்துவிட்டதாம்; படைகளை நலிவடையச் செய்ததாம் ; யுத்ததை நடத்த வேண்டிய படையினருக்குச் சரியான தலைமைத்துவம் வழங்கப்படவில்லையாம் என்றெல்லாம் எம்மைக் கண்டித்தார்கள். இவ்வாறு குற்றஞ் சுமத்துபவர்கள் ஏதோ ஒருமுறை இறந்து மீண்டும் பிறந்து வந்தவர்களைப் போலக் கதைக்கிறார்கள்.

17 வருட காலமாக நாட்டை ஆட்சி செய்து, முழுக் காலப் பகுதியில் 12 வருடங்களாக வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடத்திய கட்சியொன்று, இன்று தனது பாவங்களை எல்லாம் புதிய அரசாங்கத்தின் மீது கழுவிக்கொள்வதற்கு முயற்சி எடுக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது மாத்திரமல்ல; 'சரியான முறையில் யுத்தத்தை நடத்த வேண்டுமென்றும்' எம்மைப் பார்த்து அவர்கள் கூறுகின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றார்கள். வருடம் ஒன்றுக்கு 2500 கோடி ரூபாவைச் செலவு செய்யவேண்டிய ஒரு யுத்தத்துடன் எம்மிடம் இந்த நாட்டை ஒப்படைத்தவர்கள் இன்று யுத்தத்தைப் பற்றி எங்களுக்குத் தர்மோபதேசம் செய்கின்றார்கள். மக்களின் பாதுகாப்பைப் பற்றியும் அரசாங்கத்தின் பொறுப்புகளைப் பற்றியும் இன்று கதைக்கின்றார்கள். இப்படிப் பேசுகின்றவர்கள் எல்லாம் 'தங்களுடைய ஆடைகளை உடுத்திக்கொண்டுதானா பேசு கின்றார்கள்' என்பது சாதாரண சிங்கள மக்களுக்கு ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றது. கோடிக்கணக்கான பணத்தைக் கமிஷனாகப் பெற்றுக் கொண்டு யுத்தத்தைப் பிச்சைக்காரனின் புண்ணாக மாற்றிக்கொண்டு, தமது அரசியல் தலைவர்களையும் படைத்தலைவர்களையும் இரகசியமான முறையிலே கொலை செய்தவர்கள் இன்று எமக்கு 'யுத்தம் செய்கின்ற முறை சரியில்லை' என்று சொல்கின்றார்கள். தங்களுடைய எதிரிகளுக்குத் துப்பாக்கி களையும் துப்பாக்கிரவைகளையும் வாகனங்களையும் மருந்து வகைகளையும் சீமெந்து, இரும்பு போன்றவற்றையும் வழங்கி அவர்களைப் பலமடையச் செய்தவர்கள், கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் கும்மாளமிட்டு கோடிக் கணக்கான பணத்தைக் கொடுத்தவர்கள், இன்று நாம் எல். ரீ. ரீ. ஈ. யினரிடம் ஏமாந்து விட்டோம் என்று சொல் கின்றார்கள். இப்படிச் சொல்கின்றவர்கள் எமது நாட்டின் சாதாரண மக்களின் புத்திக்கு அபகீர்த்தியை ஏற்படுத்து கின்றார்கள். எமது மக்களை மடையர்களாகக் கொண்டு நடத்தலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள் போலும்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இந்த யுத்தத்தை எப்படி ஆரம்பித்தது, எப்படிக் கொண்டு நடத்தியது என்பதைப் பற்றி மக்களுக்கு மீண்டும் ஞாபகப் படுத்த வேண்டிய, உங்களுடைய ஞாபகத்தைச் சற்றுப் புதுப்பிக்க வேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.



"தமிழ் மக்களுக்கு நியாயமான பிரச்சினைகள் இருக் கின்றன; நாங்கள் ஆட்சிக்கு வந்தால் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி அந்தப் பிரச்சினைக்கெல்லாம் நியாயமான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்போம்" என்ற வாக்குறுதியை அளித்துத்தான் 1977 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் போட்டியிட்டது. வடக்கு கிழக்கை ஒன்றிணைத்து தமிழீழ அரசொன்றை அமைப்பதற்கான மக்கள் ஆணை யைப் பெற்றுக்கொள்ளும் முகமாகத்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி அத்தேர்தலிலே போட்டியிட்டது. இந்தக்கோரிக்கை யின் மூலம் முக்கியமாக தமிழ்த்தலைவர்கள் வடக்கு—கிழக்குப் பகுதிக்குப் பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரங் களைக் கொண்ட ஒரு சுய நிர்ணய ஆட்சியைத்தான் எதிர்பார்த்தார்கள். 1981 ஆம் ஆண்டில் மாவட்ட அபி விருத்திச் சபைகளை ஏற்றுக்கொண்டு, அதற்கான தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டதன் மூலம் அது நன்கு தெளிவாகின்றது.

1977 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் வெற்றியை ஈட்டிக் கொண்டது. ஆனாலும், அவர்கள் வாக் குறுதியளித்த விதத்தில் சர்வகட்சி மாநாடொன்றை நடத்தி தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவதற்குப் பதிலாக, 1977, ஆகஸ்ட் 15 ஆம் தேதி முதல் செத்தெம்பர் 13 ஆம் தேதிவரை தமிழர் எதிர்ப்புப் போராட்டமொன்றை ஒழுங்கு செய்தார்கள். 1141 வீடுகளுக்குத் தீவைத்து நிர்மூலமாக்கியது ;120 தமிழர்களைக் கொலை செய்தது ; 74 பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள். 1209 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஐம்பதினா யிரத்துக்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாக்கப்பட்டனர். அந்தக் கலவரத்தின்போது 10 சிங்களவர்கள் மாத்திரமே கொல்லப்பட்டார்கள் என்பதும் முக்கியமானது. அகதி களாக்கப்பட்ட தமிழ் மக்களைக் கப்பல்களிலும் புகையிரதங் களிலும் ஏற்றி வடக்கிற்குத் தள்ளினார்கள். இவையெல்லாம் உங்களுக்கு ஞாபகமிருக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தலைவர்கள் அதிகாரங்களைப் பரவலாக்கும்படி தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தியபோது, ஜே. ஆர். ஜயவர்த்தன எல்லா அதிகாரங்களையும் தனது கைகளுக்குள் வைத்துக்கொள்ளக்கூடிய நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையொன்றை உள்ளடக்கிய அரசியலமைப் பொன்றை 1978 இல் தனது பாராளுமன்றப் பெரும்பான்மை யைப் பயன்படுத்தி நிறைவேற்றிக்கொண்டார். இந்த அரசியலமைப்புக்கு எதிராக சிங்கள, தமிழ் ஆகிய இருசாரா ரிடமிருந்தும் எழுந்த எதிர்ப்புக்களை அரசாங்கம் ஒரு சதத்திற்கேனும் கணக்கில் எடுக்கவில்லை. அதேபோன்று மிதவாத ஜனநாயகத் தமிழ்த் தலைவர்களின் அபிப் பிராயங்களுக்கும் செவிமடுக்காமல் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அந்தத் தலைவர்கள் செல்லாக்காசான நிலைக்குள்ளா னார்கள். உலகப் பாராளுமன்றச் சரித்திரத் திலேயே முதல் தடவை யாக அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சித் தலைவருக் கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து முழு உலகத்தையும் சிரிப்பிலாழ்த்தியது. பாராளுமன்ற முறைமைப்பற்றித் தமிழ் மக்களுக்கிருந்த நம்பிக்கையைத் தவிடுபொடியாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுமென்றே செயற்பட்டது. ஈழத்துக்குப் பதிலாக 1981 ஆம் ஆண்டில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றுக்கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியும் தேர்தலில் போட்டியிட்டது போராட்டம் நடாத்திய தமிழ் இளைஞர் களின் எதிர்ப்புக்கு மத்தியிலாகும். அத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள், குண்டர்களோடு யாழ்ப்பாணத்துக்குச் சென்று தேர்தல் நடவடிக்கைகளைக் குழப்பியடித்துப் பெருமளவிலே தேர்தல் மோசடிகளில் ஈடு பட்டார்கள். தெற்காசியாவிலேயே இருந்த அதிசிறந்த நூலகமான யாழ்ப்பாண நூலகத்தில் 94,000 க்கும் அதிகமான புத்தகங்கள் இருந்தன. இலங்கைக்குப் பெருமையான அமைந்த அந்த யாழ்ப்பாண நூல்நிலையத்துக்குத் தீவைத்து அதை அழித்தார்கள். தமிழ்மக்களுடைய கலாசார நினைவுச் சின்னங்கள் அத்தனையையும் உடைத்து நிர்மூல மாக்கினார் கள். அது மாத்திரமல்ல; ஈழப்போராட்டத்துடன் சம்பந்தமற்ற



மலையக தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தி 'லயன்' காம்பராக்களுக்குத் தீவைத்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தினார்கள்.

இவைகளின் மூலமாகத் தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்ட செய்தி தான் என்ன? "நாங்கள் பெரும்பான்மைச் சிங்களவர் களுடைய அரசாங்கம்; தமிழ் இனத்திற்கு எந்தவித உரிமை யும் வழங்க மாட்டோம்; முடியுமானால் பெற்றுக்கொள்ளுங் கள்" என்று சொல்லுகின்ற செய்தியல்லவா? தமிழ் இளைஞர் களை ஆயுதம் ஏந்தும் நிலைக்கு ஆளாக்கியவர்கள ஐக்கிய தேசியக் கட்சியினரே. இந்தக் கொடுரமான யுத்தம் ஏற் படுத்துவதற்கான பின்னணியைக் கட்டியெழுப்பியவர்கள் ஜே. ஆர். ஜயவர்தன உட்பட சிறில் மத்திவ், பிரேமதாச, காமினி திசாநாயக்க போன்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆனால், எமது தலைவர்கள் புத்திசாலித்தனமாக ஜனநாயக தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தியிருப்பர்களேயானால், இந்த யுத்தத்தைத் தவிர்த்திருக்க முடியும் என்பது உங்களுக்கும் எங்களுக்கும் இன்று தெட்டத்தெளிவாகத் தெரிகின்ற தல்லவா?

தமிழ்மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக்காண்பதற்கு இந்தத் தலைவர்கள் அன்று எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக, தமிழ் மக்களை ஜனநாயக அரசியல் நீரோட்டத்திலிருந்து விரட்டியடிக்கக்கூடிய எல்லாக் காரியங்களையும் மேற் கொண்டார்கள். முக்கியமாக, மிதவாத தமிழ்த்தலைவர் களைக் கேலிக்கிடமாக்கியமையினால் அவர்களுக்குத் தமிழ்ச் சமூகத்தில் இருந்த இடத்தையும் கௌரவத்தையும் இல்லாமல் செய்வதற்கு வழிவகுத்தார்கள். இதனால் பாராளுமன்ற ஜனநாயகம் தமிழ் மக்களிடையே ஒரு கேலிக் கூத்தாக மாறியது. உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே வழி 'நாம் ஆயுதம் ஏந்திப் பேராட்டம் நடத்துவது தான்' என்ற உணர்வு தமிழ் இளைஞர்கள் மத்தியிலே உண்டானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1983, ஜுலை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் படைவீரர்களின் வாகனமொன்றின்மீது தாக்குதல் நடத்தி 13 படைவீரர்கள் இறந்த சமயத்தில் அதைக்காரணமாகக் காட்டி தமிழர் எதிர்ப்புக் கொலை நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. வாக்காளர் இடாப்புக்களைக் கைகளிலே வைத்துக்கொண்டு தான் குண்டர்கள் தமிழர்களுடைய வீடுகளைத் தேடித்தேடித் தாக்குதல் நடத்தினார்கள். கம்பனி உரிமையாளர்களின் பட்டியல், கைத்தொழில் உரிமையாளர்களின் பட்டியல் களைப் பார்த்துத்தான் தமிழர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களின் மீதும் கைத்தொழிற்சாலைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. நன்றாகத் திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தமிழர் எதிர்ப்பு வன்செயலின் பின்னால் ஐக்கிய தேசியக் கட்சியின் குண்டர்களும் கட்சியின் முக்கிய தலைவர்களும் இருந்தார்கள். அதனால் தான் அந்த அழிவு நடவடிக்கைகளின்போது பாதுகாப்புப் பிரிவினர் பாராமுகமாக இருக்க வேண்டியேற்பட்டது.

இந்த நாட்டின் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரை யாற்றியபோது 'அமைதியாக இருங்கள்' என்று வேண்டு கோள் விடுப்பதைவிட்டு, ஜனாதிபதி ஜயவர்தன தமிழ் மக்களை யுத்தத்துக்கு அழைக்கும் விதத்திலே தான் செயற் பட்டார். இவ்வாறான பொறுப்பற்ற அரசியல் வலிப்பு நோயினால் இலங்கையின் எல்லாச் சிங்கள மக்களும் சர்வதேச சமூகத்தின் முன் என்றுமே மாற்ற முடியாத அபகீர்த்திக்கும் வெட்கத்திற்கும் ஆளாக வேண்டியேற் பட்டது. இந்த அபகீர்த்திக்குப் பொறுப்பானவர்கள் இன்று எமக்கு தர்மோபதேசம் செய்வதற்கு முன்வந்துள்ளவர்கள், மக்களால் நிராகரிக்கப்பட்ட மோசடிக்காரர்கள் தான் என்பதை இங்கு நாம் ஞாபகப்படுத்த வேண்டும்.

'கறுப்பு ஜுலை' காரணமாக நாங்கள் உலக மக்கள் முன்னிலையில் வெட்கத்துக்கு ஆளாகும்போது, வடக்கிலுள்ள, பிரிவினைவாத ஆயுதக்குழுவினருக்கும் பெரும் நன்மை கிடைத்தது. ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களும்



யுவதிகளும் கெரில்லா குழுக்களில் சேர்ந்து கொண்டார்கள். எமது அண்டைய நாடான இந்தியாவும் 'கறுப்பு ஜுலை' யின் காரணமாக இந்தப் பிரச்சினையில் இணைந்து கொண்டது. எமது நாட்டின் மிக நெருங்கிய நட்பு நாடாக இருந்த இந்தியாவையும் ஐக்கிய தேசியக் கட்சி எதிரியாக்கிக் கொண்டது. இவ்வாறு பார்க்கையில் இந்த இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட யுத்தத்தின் ஆரம்பக் கட்டமாக இந்தக் 'கறுப்பு ஜுலை' சம்பவத்தை நாம் கருதலாம்.

1983, 'கறுப்பு ஜுலை' யினால் ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் குண்டர்கள் ஆதரவாளர்களும் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட தேசாபிமான வெற்றிகள் தாம் என்ன ? 8077 வீடுகளுக்குத் தீ வைப்பு, 471 கொலைகள், 3769 பேர் காயப்படுத்தப்பட்டமை, 3835 கொள்ளைகள் என்பன பொலிஸ் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏறத்தாழ 12,000 நிரந்தரத் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமல் போயின. கைத்தொழிற்சாலைகளுக்குத் தீ வைத்ததன் மூலம் எமது மக்கள் இழந்த தொழில் வசதிகளின் எண்ணிக்கை அது வாகும். 13 சிங்களப் படைவீரர்களின் உயிர்களுக்காக நாம் பெற்றுக்கொண்ட நஷ்டஈடு எப்படி இருந்தது ?

சிறைச்சாலையில் அரசாங்கத்தின் பாதுகாப்பிலிருந்த தமிழ் அரசியற் கைதிகள் - குட்டிமணி உட்பட 53 கைதிகள் - பச்சை பச்சையாகக் கொலை செய்யப்படுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளித்து விட்டுப் பார்த்துக்கொண்டிருந்த விதம் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதன் மூலம் சிங்கள இனத்திற்கு எந்தளவு அபகீர்த்தி ஏற்பட்டதென்பதை ஞாபகப் படுத்திக் கொள்ள முடியுமா ?

தனக்கு மரணதண்டனை வழங்கிய நீதிமன்றத்தில் குற்றவாளிக்கூண்டில் நின்று குட்டிமணி அன்று விடுத்த கூற்று எந்த அளவு சரியானது ? "எனது இந்தக் கண்கள் இரண்டையும் எனது மரணத்துக்குப் பின் வடக்கில் உள்ள தமிழ்க் குருடர் ஒருவருக்குப் பொருத்துங்கள் ; இன்று தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களுக்கெதிராகப் பயன்படுத்தப்படுகின்ற இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்போன்ற பயங்கரமான சட்டங்கள் நாளை தெற்கில் இருக்கக்கூடிய சிங்கள மக்களுக்கெதிராகவும் பயன்படுத்தப்படும் முறையை அந்தத் தமிழன் எனது கண்களினூடாக காண்பான்" குட்டிமணி அந்த வார்த்தைகளைக் கூறி, 83 யூலையில் கொலைக்காளானார். ஆனாலும், அவர் கூறியது அவ்வாறே நடைபெற்றதை நீங்களும் நாமும் தெளிவாகக் கண்டோம்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்துடன் கடந்த ஏப்பிறல் 19 ஆந் தேதி மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தபோது ஏற்பட்ட அழிவு கொஞ்சநஞ்சமல்ல. இரண்டு கடற்படைக் கப்பல்கள், இரண்டு விமானங்கள் ஆகியவற்றுடன் 169 உயிர்களையும் பலியெடுத்த சந்தர்ப்பத்தில், எமது சிங்கள மக்களுக்குத் தமிழர் எதிர்ப்பு மனநோய் ஏற்படவில்லை. எமது மக்கள் மிக அமைதியாகவும் நடுநிலைமையாகவும் புத்திசாலித்தனமாகவும் எவ்வாறு இருந்தார்கள் என்று நாம் எமக்குள்ளேயே கேட்க வேண்டும். 13 பேர் கொல்லப்பட்ட சமயத்தில் நடந்து கொண்ட விதத்திலா 169 உயிர்கள் பலியானபோது நடந்து கொண்டார்கள் என்ற கேள்விக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களது அடிவருடிகளான சிங்கள தேசபக்தர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்களும் கொடுக்கின்ற பதில் தான் என்ன ? எமது சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் இனவாதிகள் அல்ல என்பதை அவர்கள் இப்பொழுதாவது புரிந்துகொள்ள வேண்டும். எமது மக்கள் என்றும் சமாதானத்தை விரும்புபவர்கள். அதே போன்று பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொடுக்கக் கூடிய விதத்தில் அர்த்தமற்ற இனக்கலவரம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அவசியம் இருக்கவில்லை. இதன்மூலம், அன்று 1983 'கறுப்பு ஜூலை' சம்பவங்களை ஏற்படுத்தியவர்கள் சிங்கள மக்கள் அல்ல; ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமும் அதன் பின்னால் இருந்த இனவாத இயக்கமுமே என்பதை முழு உலகமும் தெரிந்து கொண்டுள்ளது.



இப்பொழுது, தாங்களாகவே ஆரம்பித்த இனப்பிரச்சினை யுத்தத்தை ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் எவ்வாறு நடத்தினார்கள் என்பதைச் சற்று நாம் கவனித்துப் பார்ப்போம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் முதலாவதாக, நாட்டின் எந்தவொரு சட்டத்துக்கும் சம்பந்தப்படாத, சந்தேகத்தின்மீது எந்தவொருவரையும் கடத்திச்சென்று கொலை செய்யக்கூடிய விதத்தில் 1979 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்ற பயங்கரச் சட்டங்களை அங்கீகரித்துக் கொண்டார்கள். இந்தச் சட்டத்தின் மூலம் ஆட்களைக் கடத்திச் செல்கின்ற, கொலை செய்கின்ற குழுக்களையும் ஏற்படுத்தினார்கள். இந்த உண்மையை 'அம்னெஸ்ரி இன்ரநஷனல்' போன்ற மனித உரிமைகள் இயக்கங்கள் கூட ஏற்றுக்கொண்டன. 1987 இல் இருந்து 1990 வரை தென்னிலங்கையின் கிராமங்களில் பயங்கரவாதச் சந்தேகநபர்கள் என்று நினைத்த இளைஞர்களையும் யுவதிகளையும் கூட்டங்கூட்டமாகக் கொண்டு சென்று, ஆயிரக்கணக்கானவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியாத விதத்தில் செயற்பட்டதைப் போன்று வடக்கு – கிழக்கிலும் தமிழ் இளைஞர்களைக் கடத்திச் சென்றார்கள். தங்களுக்கெதிரான எல்லோரையும் இம்சைப்படுத்தி, முழுமையான ஒடுக்கு முறைக்காளாக்கினார்கள். இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களைச் சட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக 'சட்ட விலக்குரிமைச் சட்டத்' தைக் கொண்டுவந்து அங்கீகரித்துக் கொண்டார்கள். இந்த நடவடிக்கை ஆட்களைக் கொல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதைப் போன்ற செயலாகும். ஒருவர் குற்றமொன்றைச் செய்தால், சட்டத்தின் பிரகாரம் அவரை நீதிமன்றத்தில் நிறுத்தி, குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வழக்கை நடத்தி தண்டனை வழங்குவதற்குப் பதிலாக, தான்தோன்றித்தனமான விதத்தில் சட்டத்தைக் கைகளில் வைத்துக்கொண்டு செயற்படக்கூடிய ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தினார்கள். அரசாங்கக் கட்சிக்கு

www.tamilarangam.net

எதிரான எந்தவொரு பிரஜையையும் கொலை செய்யும் உரிமையை, அரசாங்கக் கட்சி தனது கைகளுக்கு எடுத்துக் கொண்டது. இவ்வாறான நடவடிக்கைகளினால் தென்னிலங்கையில் ஏற்படுத்திய அழிவுகளைப் பற்றி நான் மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லை. சிங்களப் பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்களைப் பார்க்கும் போது, தமிழ்ப் பிரதேசங்களில் எவ்வாறான சம்பவங்கள் ஏற்பட்டிருக்கலாம் என்று புரிந்துகொள்ள எமது மக்களுக்கு இயலும்.

ஒரு நாட்டின் முப்படை என்பது அந்நாட்டு மக்களின் கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக்கொண்டதாக அமைய வேண்டும். ஆனாலும், அரசாங்கம் செயற்பட்ட விதத்தில் – தமது ஆட்சிப் பலத்தை நிலைநிறுத்துவதற்காக, அரசியல் தேவைகளுக்காக நாட்டின் பாதுகாப்புப் படையினரைப் பயன்படுத்திய விதத்தில் – தமிழ் மக்களிடையே மாத்திரமல்ல, சிங்கள மக்களிடையேயும் வெறுப்புக்காளானார்கள். எமது பாதுகாப்புப் படையினரின் தொழிலுக்கும் சுயகௌரவத்துக்கும் ஊறுவிளைவிக்கக்கூடிய விதத்தில் செயலாற்றிய அரசியற் கட்சியொன்று, இன்று எமது படையினருக்கு அரசாங்கம் தலைமைத்துவம் வழங்கும் விடயத்தைப் பற்றிப் போதிக்கின்றது.

அந்தக் காலகட்டத்தில் தான் இலங்கை அரசாங்கம் முழு உலகத்தின் முன்னிலையிலே, கொலை செய்கின்ற, மனிதாபிமானமற்ற முறையிலே ஆட்களை இம்சைப்படுத்துகின்ற, தான்தோன்றித்தனமாக ஆட்சியை நடத்துகின்ற ஓர் அரசாங்கமாக சர்வதேச மனித உரிமைகள் இயக்கத்தினால் விமர்சனம் செய்யப்பட்டது. எனவே, பாதுகாப்புப் படையினரதும் பொலிசாரினதும் தொழில் பற்றிய கௌரவத்தைப் பாதுகாக்கக்கூடிய சூழ்நிலை ஒன்றை மீண்டும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கேற்பட்டது.



பாதுகாப்புப் படைகளின் முக்கிய பொறுப்பு, நாட்டு மக்களையும் அரசியலமைப்பையும் மக்களின் இறைமையையும் பாதுகாப்பதாகும். ஆனால், கடந்த காலங்களில் ஆட்சியிலிருந்த கட்சியைப் பாதுகாப்பதற்காகத் தான் அப்படைகள் பயன்படுத்தப்பட்டன. இந்த நிலைமையை முற்றுமுழுதாக மாற்றியமைத்து எல்லா இன மக்களினதும் நம்பிக்கையையும் கௌரவத்தையும் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பாதுகாப்புப் படையினருடைய நிலைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது என்ற உண்மையை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைவுபடுத்த வேண்டும்.

போர்முனைகளில் பல்வேறு கஷ்ட, நஷ்டங்களுக்கு மத்தியில் போராடுகின்ற எமது படைவீரர்களின் தேவைகள் எவ்வளவு தான் இருந்தபோதிலும், 'கம்உதாவ' நடாத்தி, சங்கீதக் களியாட்டங்களை நடாத்தி தமது பிறந்த தினத்தைக் கொண்டாடிய முறையை நாம் மறந்துவிட முடியாது. அர்த்தமற்ற கேளிக்கைகளுக்காக கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்தார்கள். அதுமாத்திரமல்லாமல், தனக்கென்றே ஒரு சிங்காசனத்தையும் செய்து கொண்டார்கள். தம்முடைய குண்டர்களுக்கும் அடிவருடிகளுக்கும் "புல்பதிக்கும் கொந்தராத்து" வேலைகளைக் கொடுத்து, அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்கும் முன்னைய ஆட்சியாளர்கள் மறந்துவிடவில்லை. ஆனாலும், படையினருக்குத் தேவையான கிடுகுகள், பாய்கள், சவர்க்காரம், பற்பசை, விசுக்கோத்து போன்றவற்றை மக்களே சேகரித்துப் படைமுகாம்களுக்குக் கொண்டுபோய் விநியோகித்தார்கள். கும்மாளங்களுக்குச் செலவிட்ட பணத்தைக் கொண்டு யுத்தமுனையில் போராடிய படைவீரர்களின் தேவைகளை நிறைவேற்ற அன்றைய தலைவர்களுக்கு முடியவில்லை. இப்படித்தான் அவர்கள் படையினரைப் பற்றிக் கவனம் செலுத்தினார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்காமல் யுத்தத்தை நடத்தி, அர்த்தமற்ற வகையில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுத்தத்தில் பலியாகியபோது, அரசியல் தீர்வொன்றை வழங்க இந்தியா தலையிட்டது. இதன்பிரகாரம் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட நேர்ந்தது. யுத்தம் முடிவடைவதற்கான அறிகுறிகள் தென்பட்டன. தமிழ்க் கெரில்லா இயக்கத்தினர் தங்களுடைய துப்பாக்கிகளைக் கீழே வைத்து சனநாயக அரசியல் நீரோட்டத்திற்குவர ஆரம்பித்தார்கள். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எல். ரீ. ரீ. ஈ. இயக்கம் மாத்திரம் திரிசங்கு நிலையில் இருந்தது. அவர்கள் ஜே. ஆர். ஜயவர்தனவை நம்பவில்லை. இறுதிநேரத்தில் அவர் தங்களை ஏமாற்றி விடுவார் என்று அந்தத் தலைவர்கள் எண்ணினார்கள். இந்தியப்படை தலையிட்டதன் காரணமாக செய்து கொள்வதற்கு வேறு வழி எதுவும் இருக்கவில்லை. இப்படி இருந்தபொழுதுதான் ஐக்கிய தேசியக் கட்சியின் மூடத்தலைவர்கள், பெரும் மூடத்தனமான ஒரு தீர்மானத்தை மேற்கொண்டார்கள். "அழுவதற்காகக் காத்திருந்தவன் கண்ணில் விரலால் குத்தியது" போன்றே அந்த நடவடிக்கை அமைந்தது. குமரப்பன் உட்பட எல். ரீ. ரீ. ஈ. இன் முக்கிய தலைவர்கள் சிலர் ஆயுதங்களைக் கொண்டு செல்கையில் இந்தியப் படையினர் அவர்களைக் கைதுசெய்தார்கள். அவர்களைத் தங்களிடம் ஒப்படைக்கும்படி கொழும்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. நெருக்கடியான நிலையைப் பற்றித் தெரிந்திருந்த காரணத்தினால் அவர்களைக் கொழும்புக்குக் கொண்டுசெல்ல வேண்டாமென்று இந்தியப் படையினர் எமது அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கிய போதிலும், அதை ஏற்றுக்கொள்ளாமல் தலைக்கனத்துடன் எல். ரீ. ரீ. ஈ. சந்தேக நபர்களைக் கொழும்புக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்தது. அப்போது அக்குழுவினர் 'சயனைட்' அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்கள். அதைக் காரணமாகக் கொண்டு எல்.ரீ.ரீ.ஈ. இனர் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தார்கள். இந்தியப்படை எல்.ரீ.ரீ.ஈ. இன் தாக்குதலுக்காளானது. அவை அனைத்தையும் எதிர்கொண்டு யாழ்ப்பாண நகரத்தையும் வடக்கு – கிழக்கின் பெரும்பாலான பிரதேசங்களையும் எல். ரீ. ரீ. ஈ. இனரின் பிடியிலிருந்து இந்தியப்படை மீட்டெடுத்தது.



அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின்மூலம் இந்தக் காலகட்டத்தில் தான் மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்திய அமைதிப்படையினரின் நடவடிக்கைகளினால் எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் தலைவர்கள் உட்பட பெரும்பாலானவர்கள் முல்லைத்தீவு காட்டுக்குள் ஒழிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. 1989 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலும், சனாதிபதித் தேர்தலும், மாகாணசபைத் தேர்தலும் இந்தியப் படையின் உதவியுடன் தான் வடக்கு – கிழக்கில் நடாத்தப்பட்டது. அக்காலப்பகுதியில் 1988 – 1989 இல் – எமது படையினரின் உயிர்ச்சேதம் 629 ஆகக் குறைந்தபோது, இந்திய அமைதிப் படையினரின் உயிர்ச்சேதம் 800 ஆக இருந்தது.

ஆயுதங்களைக் கீழே வைத்து, மாகாணசபைத் தீர்வை ஏற்றுக்கொண்டு அதற்காக நடாத்தப்பட்ட தேர்தலில் போட்டியிட்டு ஆட்சிக்கு வந்த தமிழ் இயக்கங்கள், உண்மையிலேயே அதிகாரம் பரவலாக்கப்பட்ட மாகாணசபை ஆட்சிமுறையொன்று அமைக்கப்படும் என்று நம்பினார்கள். ஆனாலும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் போலித்தனமாகத்தான் செயற்பட்டார்கள் என்பது அவர்களுக்குப் புரிந்தது. ஆனால், இலங்கையில் எதிர்க்கட்சியின் அதிகாரத்துக்குச் சென்ற ஒரேயொரு மாகாணசபை வடக்கு – கிழக்கு மாகாணசபையாகும். அதைக் குழப்பியடிப்பதற்காகத் தன்னால் செய்யக் கூடிய எல்லா நடவடிக்கைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இரகசியமான எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொண்டது. சட்டபூர்வமாக மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. உரிய நிதி வசதிகள் ஒதுக்கப்படவில்லை. எந்தவொரு புனர்நிர்மாண வேலைகளும் செய்வதற்கு இடமளிக்கப்படவில்லை. அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு எந்தவிதமான உதவியும் வழங்கப்படவில்லை. இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தான் திரு. ஆர். பிரேமதாச, எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்துடன் இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தி 1989 இல் சனாதிபதித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேர்தலுக்கு முன்வந்தார். அதேபோன்று ஜனதா விமுக்திப் பெரமுனவுடனும் ஏதோவொரு சமரசத்தை ஏற்படுத்திக் கொள்ள திரு. பிரேமதாசவால் முடிந்தது. தான் வெற்றி பெற்றால், இந்திய அமைதிப் படையை வெளியேற்றுவேன் என்பதுதான் அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியாகும். மக்களுக்கு வழங்கப்பட்ட ஆயிரக்கணக்கான வாக்குறுதிகள் எப்படியிருந்த போதிலும்கூட, திரு. பிரேமதாச, "ஸ்ரீமத்" பதவிக்கு வந்தவுடன் 1989 யூன் 2 ஆந் தேதி பத்தரமுல்லயில் உள்ள விகாரையொன்றில் வைத்து, "இந்திய அமைதிப்படை ஒற்றோபர் 31 ஆந் தேதிக்கு முன்னர் இலங்கையிலிருந்து முற்று முழுதாக வெளியேற வேண்டும்" என்று பகிரங்கமாக எடுத்துரைத்தார். யுத்தத்தில் உதவியளிக்க வந்தவர்களுக்கு இப்படித்தான் அன்றைய அரசாங்கம் மதிப்பளித்தது.

இலங்கையில் இனப்பிரச்சினைப் போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த எமது அண்டை நேசநாடு ஒரு நண்பன் என்ற வகையிலே தனது மக்களில் 1365 பேருடைய உயிரைப் பலிகொடுத்த இந்திய அரசாங்கத்துக்கு ஆகக்குறைந்தது நன்றி செலுத்துவதற்குக்கூட பிரேமதாச அரசாங்கத்திடம் பெருந்தன்மை இருக்கவில்லை. உதவிக்கு வந்து வெட்கப் பட்டு, வந்த காரியத்தைக்கூட முடிக்காமல் மீண்டும் திரும்பிப் போவதற்கு இந்தியாவுக்கு வழிசமைத்த காரணத் தினால், எமக்கு உதவியளிக்க உத்தேசிக்கின்ற எந்தவொரு நாட்டையும் ஒருமுறையல்ல, பலமுறை அதுபற்றிச் சிந்திக்க வேண்டிய நிலைக்கு அது தள்ளியது. அதனால் தான் கடந்த காலங்களில் இலங்கைக்கு உதவியளிக்க எந்தவொரு அரசாங்கமும் முன் வரவில்லை.

அது எப்படியிருந்தபோதிலும்கூட, பிரேமதாச-எல்.ரீ.ரீ.ஈ. தேநிலவு காலத்தில் இந்திய அமைதிப்படை வெளியேறிச் சென்ற எல்லா காவல் நிலையங்களிலும் எல்லா முகாம்களி லும் இருப்பதற்கு எல். ரீ. ரீ. ஈ. யினருக்கும் இடம் கிடைத்தது.



அதுமாத்திரமல்ல ; எமது " பொலிஸ் உத்தியோகத்தர் களின் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைச் செய் வதற்குப் பிரேமதாச அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்ய எங்களால் முடியும்" என எல். ரீ. ரீ. ஈ. தலைவர்கள் அன்று கூறியது எமக்கு இன்றும் நினைவில் இருக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில் பொலிஸ் இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு எல். ரீ. ரீ. ஈ. தலைவர்களுக்குச் 'சல்யூட்' அடிப் பதற்கும் அவர்கள் வற்புறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களும் இருந்தன. பொலிஸில் இருந்த பலபேர் இது சம்பந்தமாகப் பெரும் மனத்தாங்கலோடு தான் அந்தக் காலத்தில் இருந்து வந்தார்கள்.

இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்தவுடன் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்த பொலிஸ் நிலையங்களுக் கெல்லாம், அவர்களைச் சரணடையுமாறு கட்டளை வழங்கியதும் பிரேமதாசவினுடைய ஆட்சி தான் என்பதைத் தெரியாதவர்கள் யாரும் இன்றில்லை. நாம் அறிந்த அள வில், சரணடைந்த நூற்றுக்கணக்கான பொலிஸ் உத்தி யோகத்தர்கள் றூமஸ்குளம் காட்டிற்குக் கொண்டு செல்லப் பட்டு 'கியூ' வில் நிறுத்தப்பட்டு, வெடிவைத்துக் கொல்லப் பட்டுள்ளார்கள். ஸ்ரீமத் பிரேமதாச தன்னுடைய சிங்கா சனத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக எமது பொலிஸ் உத்தி யோகத்தர்களை இப்படித்தான் பலிகொடுத்தார்.

அதேபோன்று கிளிநொச்சி நகரத்திற்கு உட்செல்கின்ற காவல் நிலையத்தைத் தாண்டி யாழ்ப்பாணத்துக்குச் செல்வதற்காக எல். ரீ. ரீ. ஈ. தலைவர்களில் ஒருவரான மகேந்திரராசா எனப்படும் மாத்தயா உட்பட ஏறத்தாழ 200 பேர், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறைப் பகுதிகளில் போராட்டம் நடந்தபொழுது வந்தார்கள். கிளி நொச்சி இராணுவ முகாமின் நடவடிக்கைப் பொறுப்பாளர் உடனடியாக அவர்களைக் கைதுசெய்தார். ஏனைய பகுதிகளில் எல். ரீ. ரீ. ஈ. யினருடன் மோதல் ஏற்பட்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் கருவி மூலமாக அவருக்குத் தெரியவந்திருந்தது. தன்னுடைய பொறுப்பிலிருந்த எல். ரீ. ரீ. ஈ. தலைவரான மாத்தயா உட்பட ஏனையோர் தொடர்பாக தான் என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தனது உயரதிகாரிகளிடம் அவர் ஆலோசனைக் கேட்டார். அப்பொழுது அந்த உத்தியோகத்தருக்குக் கிடைத்த ஆலோசனை மிகவும் விந்தையாக இருந்தது. "மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலே தான் மோதல்கள் ஏற்பட்டுள்ளன; எனவே, இந்த இடத்தில் மோதல் ஏற்பட இடமளிக்க வேண்டாம்" என்பது தான் அந்த ஆலோசனை. மாத்தையா உட்பட ஏனையோரை விட்டுவிடுமாறு உயர்மட்டத்திலிருந்து கட்டளை கிடைத்தது. இலங்கை இராணுவம் ஒரே நாட்டின், ஒரே அரசாங்கத்தின் இராணுவமாக அல்ல, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற இடங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஒரு விசேட இராணுவமாகத்தான் அன்று கருதப்பட்டது. நடந்து கொண்டிருந்த யுத்தத்தை, இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான யுத்தமாக அவர்கள் கருதவில்லை. அந்தந்த மாவட்டங்களுக்கே உரித்தான யுத்தமாகத்தான் அவர்கள் கருதினார்கள். இவ்வாறு யுத்தம் ஒன்றைக் கொண்டு நடத்தத்தான் முடியுமா ? இப்படியான கட்டளைகளால் படைகளுக்குள் ஒரு குளறுபடியான நிலைப்பாடு ஏற்படுமல்லா ? இவ்வாறு செயற்படுகின்ற உத்தியோகத்தர்களைப் பற்றி சாதாரண இராணுவ வீரனுக்கு நம்பிக்கையொன்று ஏற்படத்தான் முடியுமா? தான்பிடித்த எதிர்த்தரப்புப் படையின் தலைவர்களை விடுதலை செய்யுமாறு ஆலோசனை வழங்குவது சித்த சுவாதீனமுள்ள ஓர் அரசாங்கத்தின் செயற்பாடா?

நாம் இவைகளைப் பற்றி கேள்வி கேட்கத்தான் வேண்டும். அவ்வாறு கேட்பதற்கு எமக்கு உரிமையுண்டு. ஏனென்றால் முப்படைகளின் நடவடிக்கைகளுக்கும்,யுத்தத்திற்குத் தேவையான எல்லாவற்றையும் விலைகொடுத்து வாங்குவதற்கும், மக்களுடைய பணம் தான் செலவு செய்யப்படுகின்றது.



எனவே, அரசாங்கம் ஒன்று யுத்தத்தை நடத்துவது இப்படித்தானா? என்று கேள்வி கேட்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. என்றாலும், ஐக்கிய தேசியக் கட்சி இந்த யுத்தத்தைக் கொண்டு நடத்திய விதத்தைப் பற்றி மக்களுக்கோ அல்லது பாராளுமன்றத்துக்கோ பொறுப்பான விதத்தில் செயற்பட்டார்களா? உண்மையில் இல்லவே இல்லை ! அவை எல்லாவற்றையும் யுத்த இரகசியங்கள் என்று மூடிமறைத்தார்கள். மக்களையும் மக்கள் தெரிவு செய்த மக்கள் பிரதிநிதி களையும் இருளில் வைத்துக் கொண்டுதான் இந்த யுத்தத்தை இவ்வளவு காலமும் அவர்கள் நடத்தி வந்தார்கள். ஆனால், இன்று, மக்களுக்குப் பொறுப்பான ஓர் அரசாங்கம் என்ற வகையிலே யுத்தத்தின் உண்மையான யதார்த்த நிலைமை பற்றியும், சமாதான நடவடிக்கைகளின் யதார்த்த நிலைமை பற்றியும் நாம் மக்கள் முன் உண்மைகளை முன்வைக்கின்றோம்.

இந்திய அமைதிப்படை படிப்படியாக மாவட்டங்களிலிருந்து வெளியேறிச் சென்றபொழுது, அந்த இடங்களில் சட்டத்துக்கும் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான பொலிசாரும் இராணுவத்தினரும் பொறுப்பேற்றிருக்க வேண்டும். ஆனால், அப்படியான நடவடிக்கை எதுவும் அந்த விதத்தில் இடம்பெறவில்லை. வவுனியாவிலிருந்து ஆனையிறவு வரை எல்லா நகரங்களையும் கைப்பற்றியிருந்த இந்தியப் படையினர் அவைகளை எமது படையினரிடம் ஒப்படைத்த போதிலும், உண்மையிலேயே எமது ஆட்சி யாளர்கள் அந்த நகரங்களை எல். ரீ. ரீ. ஈ. ஆயுதக் குழுவினரிடம் பரிசாக வழங்கியதுதான் உண்மையில் நடந்ததாகும். எமது, சிறிய இராணுவ முகாம்களை இலகுவில் இல்லாமல் செய்வதற்கும் எமது படையினரை அந்தந்த இடங்களில் இருந்து பின்நோக்கிச் செல்ல வைப்பதற்கும் ஏற்ற வகையில் எல். ரீ. ரீ. ஈ. யினர் செயற்பட அவர்கள் இடமளித்தார்கள். காட்டுக்குள் புகுந்து, இந்தியப் படையினருக்கு ஒளிந்திருந்த எல். ரீ. ரீ. ஈ. யினரை வெளியே கொண்டு வந்து எமது வடபகுதியின் பெரும்பாலான பிரதேசங்களை அவர்கள் கைப்பற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கியதும் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமேயாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று எதிர்க்கட்சியினர் தாம் செய்த அநியாயங்களிலிருந்து தங்கள் கைகளைக் கழுவிக்கொள்ள முடியாது. மக்கள் முன்னிலையில் இந்தத் தலைவர்கள் குற்றவாளிகளாகத் தான் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அதனால் தான் 'இன்று கிழக்கு மாகாணத்தை எல்.ரீ.ரீ.ஈ.யினரின் ஆட்சிக்கு ஒப்படைத்துள்ளோம்' என ஐக்கிய தேசியக் கட்சியின் இன்றைய தலைவர்கள் புதிய அரசாங்கத்தின் மீது ஆதாரமற்ற கண்டனத்தைத் தெரிவிக்கின்றார்கள். தங்களின் கட்சியின் ஆட்சிக் காலத்தில் வட பிரதேசத்தை எல். ரீ. ரீ. ஈ. கைப்பற்றுவதற்குத் தாங்கள் இடமளித்ததை மூடி மறைத்துக் கொள்வதற்காக, இந்த ஆதாரமற்ற கண்டனங்களை எழுப்புவதன் மூலம் முடியும் என எண்ணினாலும், யாழ்ப்பாணக் கோட்டையை விட்டுவிட்டுப் பின்நோக்கிச் செல்ல வேண்டியேற்பட்ட சம்பவத்திற்கு எமது பாதுகாப்புப் படையில் உள்ள நேர்மையான உயர் அதிகாரிகள் ஒரு நாளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு மன்னிப்பு வழங்கமாட்டார்கள்.

1990 ஜூலை மாதத்தில் ஓமந்தை, மாங்குளம் போன்ற இடங்களிலிருந்து இராணுவத்தினர் போராடிக்கொண்டிருந்தபோது, காயமடைந்த படைவீரர்களை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்கு ஹெலிகொப்டர் ஏதும் இல்லாதிருந்த நேரத்தில், திரு. பிரேமதாச அவருடைய கம்உதாவ நண்பர்களை அழைத்துக்கொண்டு வருவதற்காகக் ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்திய விதம் எமக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கின்றது. கூட்டுப் படைத் தலைமையகத்துக்குக்கூட இரவு நேரத்தில் திரு.பிரேமதாசவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொலைபேசி மூலம் பல்வேறு விடயங்களைப் பற்றி ஆலோசனைகள் கூறிய விதம் எமக்கு ஞாபகத்தில் உண்டு. இவையெல்லாம் படையினரைத் தரக்குறைவாகக் கருதிய சம்பவங்களாக எமது சரித்திரத்தில் எழுதப்படும். ஐக்கிய தேசியக் கட்சி அன்று சொன்னதையும், செய்ததையும் இன்று மறந்து போய்விட்டது ஆச்சரியத்துக்குரியதே !



திம்புலாகல நாயக்க தேரரின் கொலைபற்றி ஐக்கிய தேசியக் கட்சியினர் பெருங்குரல் எழுப்பினார்கள். அந்தத் தேரருக்குத் தேவையான பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். இருந்த பாதுகாப்பைக்கூட வேண்டாம் என்று கூறி அவர் அன்று தனியாகப் போன போது தான் கொலைசெய்யப்பட்டார். ஆனால், தங்களுடைய ஆட்சிக் காலத்தின்போது 1987 ஜூன் மாதத்தில் அறந்தலாவையில் 27 பிக்குமார் எல். ரீ. ரீ. ஈ. யினரால் கொலைசெய்யப்பட்ட போது. அது சம்பந்தமாகச் செயற்பட ஏன் முன்வரவில்லை என்பதற்கான காரணங்களை மக்களுக்குக் கூறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இன்றாவது ஆயத்தமாக உள்ளதா? அதைப்பற்றி அந்தளவு வேதனையை வெளிப்படுத்தாத இந்தத் தலைவர்கள் தங்களுடைய பழைய பழக்கமான இனவாதத்தைத் தூண்டிவிடுவதற்கு, திம்புலாகல தேரரின் கொலையைப் பயன்படுத்த மேற்கொள்ளாத முயற்சிகள் எதுவுமே இருக்கவில்லை.

ஆனாலும், அந்த முயற்சிகள் கைகூடவில்லை. இனிமேலும் அது கைகூடப் போவதும் இல்லை. ஏனென்றால் எமது மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தை விட்டு முன்னேறிச் சென்றுள்ளார்கள். எமது பாதுகாப்புப் படையினர் தங்களுடைய பொறுப்புக்களை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்கள். எல்லாவிதமான இரத்தக் களரிகளையும் நிறுத்துவதற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுத்துள்ள முடிவு, அதே விதத்தில் பாதுகாக்கப்படுவதற்கான விதத்தில் அவர்கள் திடசங்கற்பத்துடன் செயற்படுகின்றார்கள்.

சங்கைக்குரிய பௌத்த குருமார்களின் கொலைகளைப் பற்றி ஞாபகப்படுத்தியதன் காரணமாக, 1985 'மே மாதம் 14 ஆந் தேதி அநுராதபுரத்தில் உள்ள ஸ்ரீமகாபோதிக்கு அருகில் 'சில்' அனுட்டித்துக் கொண்டிருந்த பௌத்த அடியார்கள், பிக்கு, பிக்குணிகள், பொது மக்கள் உட்பட 204 பேர் எல். ரீ. ரீ. ஈ. யினரால் கொலை செய்யப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சம்பவத்தை நினைவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த இடத்தைச் சுற்றிவர மூன்று படைமுகாம்களும், பிரதான பொலிஸ் நிலையம் ஒன்றும் இருக்கையில் ஒன்றரை மணித்தியாலங்களாக இந்தக் கொலைகளை நடத்திய எல். ரீ. ரீ. ஈ. கொலையாளிகளுக்கு வில்பத்து பகுதிக்குச் செல்வதற்கு இடமளித்து, மேலே பார்த்துக்கொண்டிருந்த அரசாங்கம், ஆகக்குறைந்தது பக்கச்சார்பற்ற விசாரணையொன்றையாவது நடத்தியதா? மக்களுடைய பாதுகாப்பைப் பற்றிப் பொறுப்புக் கூறவேண்டிய அரசாங்கம் அன்று இப்படித் தான் நடந்து கொண்டது.

நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்களை வட பகுதியில் இருந்து வெளியேறும்படி எல். ரீ. ரீ. ஈ. யினர் கட்டளை விடுத்த சந்தர்ப்பத்தில் இந்த நாட்டின் அரசாங்கம் அந்த மக்களைப் பாதுகாப்பதற்கு ஏதேனும் ஒரு நடவடிக்கையை மேற்கொண்டதா? அரசாங்கத்தின் பொறுப்பு எங்கே போனது? அதற்கு என்ன தான் நடந்தது? பல்லிய கொடல்லவில் 166 முஸ்லிம் கிராமவாசிகள் கொலை செய்யப்பட்ட சம்பவத்தை எமது மக்கள் மறந்துவிட மாட்டார்கள். அதுமாத்திரமல்ல ; இந்த யுத்தத்தின்போது நிராயுதபாணிகளான சாதாரண தமிழ் மக்கள் எத்தனைபேர் கொலைசெய்யப்பட்டார்கள் ? 1990, செத்தெம்பர் மாதத்தில் மட்டக்களப்பில் உள்ள கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில் இருந்த தமிழ் அகதிகள் 26,000 பேரில், 158 பேர் காணாமல் போனமை பெரியதொரு அநியாயமாகும். 1991 ஆம் ஆண்டில் கொக்கட்டிச்சோலை கிராமத்துக்குச் சென்ற படைவீரர்கள் 67 கிராமவாசிகளைக் கண்மூடித்தனமாகச் சுட்டும் வெட்டியும் கொலை செய்தது எல். ரீ. ரீ. ஈ. யினரைப் பழிவாங்குவதற்காகவாகும். இப்பொழுது அதில் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டுள்ளது. ஷெல் தாக்குதல்களால் இன்னும் எத்தனை தமிழ்மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்; காய மடைந்தார்கள்? இந்த அநியாயமான நடவடிக்கைகளினால் தமிழ் மக்கள் மேலும் மேலும் புலிகள் இயக்கத்தின் பக்கம் பாதுகாப்புக்



காகத் தள்ளப்பட்டதைத் தவிர வேறு என்ன தான் நடந்தது? தமிழ் மக்களும் எமது நாட்டின் பிரசைகள் என்று கருதிச் செயற்பட வேண்டிய அவசியம் கடந்த அரசாங்கத்திற்கு இருக்கவில்லை என்பதைத்தானே இந்தச் சம்பவங்கள் எங்களுக்குத் தெளிவுபடுத்துகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி முஸ்லிம் பள்ளிவாசலில் தொழுகைக்காக ஒன்றுகூடியிருந்த முஸ்லிம் மக்கள் அத்தனைபேரையும் முஸ்லிம் மதகுருமார்களையும் பச்சை பச்சையாகக் கொலைசெய்து விட்டு எல்.ரீ.ரீ.ஈ.யினர் ஓடிய சமயத்தில், அங்குள்ள விதவைகள் தங்களுடைய நெஞ்சுகளில் அடித்துக்கொண்டு ஓலமிட்டு அழுதபோது, இந்த அநியாயம் நடந்தபோது ஓர் அரசாங்கம் இருக்கவில்லையா என்று கேட்டு அழுது புலம்பியது போன்று எங்களுக்குத் தோன்றுகிறது.

பிரேமதாச, எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களைக் கொழும்பிலுள்ள ஹோட்டல்களில் தங்கவைத்து, இரகசியப் பேச்சுவார்த்தை நடத்திய போதுதான் அமிர்தலிங்கம், சாம் தம்பிமுத்து போன்ற மிதவாதத்தலைவர்கள் கொழும்பில் வைத்துக் கொலைசெய்யப்பட்டார்கள். அந்தச் சந்தர்ப்பங்களிலே எல். ரீ. ரீ. ஈ. யினரைக் காப்பாற்றும் விதத்தில் பேசியவரும் திரு. பிரேமதாசவே.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த தினத்தை நினைவு கூறுவதற்காக முதல் தடவையாகச் சிங்கக்கொடியை ஏற்றிவைத்த வரதராஜப்பெருமாள் போன்ற ஈழப் போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் தலைவர்களுக்கும் இயக்கங்களுக்கும் எதிராகவும், இலங்கையைக் கூறுபடுத்துவதைத் தோல்வியடையச் செய்து இலங்கையின் ஒற்றுமையைப் பாதுகாப்பதற் கென எங்களுக்காக உயிர்த் தியாகம் மேற்கொண்ட இந்தியாவுக்கு எதிராகவும் பிரேமதாச ஆட்சி எல். ரீ. ரீ. ஈ. யுடன் இணைந்து மேற்கொண்ட அநியாயங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடை பெறாமல் இருந்திருக்குமேயாயின், இன்று எமக்கு சமாதானத்தின் பெறுபேறுகளை அனுபவிக்கக்கூடியதாக இருந்திருக்கும். எல். ரீ. ரீ. ஈ. யின் நோக்கங்களைத் தூர திருஷ்டியுடன் தெளிவாகக் காணக்கூடிய அறிவு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு இருக்கவில்லை. சிங்கள மக்களும் சிங்கள அரசாங்கமும் தமிழ் மக்களை ஏமாற்றுகின்றன என்பதை நிரூபிப்பதற்குத்தான் எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்திற்குத் தேவைப்பட்டது. ஜனநாயகத் தமிழ்த் தலைவர்கள் சிங்கள அரசாங்கத்திடம் தமிழ்மக்களின் உரிமைகளைத் தாரை வார்த்துக் கொடுக்கின்றார்கள் என்பதை நிரூபிக்கத்தான் அவர்களுக்குத் தேவைப்பட்டது. தமிழ் மக்களுடைய அபிலாசைகளுக்காகப் போராடுகின்ற ஒரே பிரதிநிதி எல். ரீ. ரீ. ஈ. இயக்கம் தான் என்பதை நிரூபிக்கத்தான் அவர்களுக்குத் தேவைப்பட்டது. இவை களையெல்லாம் எந்தவித கஷ்டமுமில்லாமல் செய்துகொள் வதற்கு எல். ரீ. ரீ. ஈ. க்கு இடமளித்தவர் பிரேமதாசவும் ஐக்கிய தேசியக் கட்சியுமாகும். சாதாரண தமிழ் மக்களை எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தின் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்குள் தள்ளவிட்டவர்கள் இந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கள்தான். இந்த மடமையான ஆட்சியாளர்கள் தாங்கள் ஆரம்பித்த யுத்தத் தினால் உலகத்திலுள்ள மிகப் பயங்கர மான, கொடூரமான இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்பு வதற்கு ஆதரவளித்தது மாத்திரமல்ல, தமிழ்ச் சமூகத்தில் மக்கள் விரோத, ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடக்கூடிய ஏனைய எல்லாப் பிரிவினரை யும் பலவீனப்படுத்தினார்கள்.

கடந்த காலங்களில் யுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டமையும் அந்த யுத்தம் கொண்டு நடாத்தப்பட்ட முறையும் தவறானது என்பதைப் புரிந்து கொண்ட புத்தியுள்ள தலைவர்களும் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தார்கள் என்ற உண்மையையும் நாம் மறந்துவிடக் கூடாது. சாதாரண ஐக்கிய தேசியக் கட்சியினருக்குக்கூட தங்களுடைய கட்சியின் யுத்தம் தொடர் பாக இருக்கக்கூடிய பாரதூரமான தவறுகள் தெரியாமல் இருக்கவில்லை. கடந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட



திரு. காமினி திசாநாயக்க தனது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சமஷ்டி ஆட்சி முறையின் எல்லாக் குணாம்சங்களையும் கொண்ட ஆலோசனைகளை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முன்வைத்திருந்தார் என்ற உண்மையை நாங்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் நேர்மையுடன் குறிப்பிடாவிட்டால் அது ஒரு பாரிய தவறாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பழைய சிந்தனை மாற்றமடைந்து, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புதிய அரசாங்கம் மேற்கொண்ட சில முயற்சிகளுக்கு நேர்மையுடன் ஒத்து ழைப்பு வழங்குவார்கள் என்பது பொதுமக்களின் எதிர் பார்ப்பாகும்.

முன்னைய பிரேமதாச ஆட்சி ஒருபுறத்தில் எல். ரீ. ரீ. ஈ. யை பலப்படுத்துவதற்கு உதவியளித்தும், மறுபுறத்தில் அதனைத்தோல்வியடையச்செய்வதற்குஎமக்குஉதவியளித்த இந்தியப் படையினரைத் திருப்பி அனுப்பியும் இந்த நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் இளைஞர்களில் ஆயிரக்கணக்கானோரின் உயிர்களைப் பலியெடுக்கும் விதத்திலே நடவடிக்கை மேற்கொண்டது. யுத்தத்தை நடாத்தும் அதே நேரத்தில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முயற்சியெடுப்பதாக முழு உலகத்துக்கும், இந்த நாட்டில் சமாதானத்தை விரும்பும் மக்களுக்கும் தெரிவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட குறுக்கு வழி நடவடிக்கை அதுதான். இனப்பிரச்சினையைப் பற்றி சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு போன்ற மாநாடுகளை நடத்திய விதம் எங்களுக்கு ஞாபகத்திலுண்டு. இலங்கைக்கு உதவியளிக்கின்ற நாடுகளையும், சர்வதேச மனித உரிமை இயக்கங்களையும் ஏமாற்றுவதற்காகவே அவ்வாறு செய்யப்பட்டன. அதேபோன்று எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்திற் கெதிராக பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் அரசியற் கட்சிகளையும் ஏமாற்றுவதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவையெல்லாம் இன்று சந்தேகம் ஏதுமில்லாமல் தெட்டத்தெளிவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிரூபிக்கப்பட்டுள்ளன. அந்த வட்டமேசை மாநாடுகளினாலும் சர்வகட்சி மாநாடுகளினாலும் எந்தவித பலாபலனும் ஏற்படாத காரணத்தினால் இன்று இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை பெற்றுத்தரவேண்டிய பாரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளதும், அதற்காக நேர்மையான முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் பொதுஜன ஐக்கிய முன்னணி என்பதை நாங்கள் பெரும் நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த யுத்தத்துக்கு ஆயிரக்கணக்கான தமது பிள்ளைகளை அனுப்பி கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள், அந்த யுத்தத்தை நிறுத்தி நியாயமான அரசியல் தீர்வொன்றின் மூலம் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகக் கடந்த பொதுத் தேர்தலிலும் ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு ஆணை வழங்கிய காரணத்தினால்தான் நாம் அவ்வாறு கூறுகின்றோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், குறிப்பாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கும் மக்கள் ஆணை வழங்கியதற்கான காரணம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகும். இன்று இந்த யுத்தம் யாருடைய தேவைக்காக நடாத்தப்படுகின்றது? சமாதானத்தைப் பற்றிப் பேசிய புதிய அரசாங்கம் இப்போது யுத்தத்தை ஏன் நடத்துகின்றது என்ற கேள்வி இங்கே எழுகின்றது. இந்தக் கேள்வியைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் எமக்கு சமாதானத்தைக் கட்டியெழுப்பக்கூடிய அந்த உயர்ந்த காரியத்துக்குப் பங்களிப்புச் செய்ய முடியாது.

1977 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை, தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்காத, தங்களுடைய ஜனநாயக தேசிய அபிலாசைகளை மூடி மறைக்கின்ற ஒரு சிங்கள அரசாங்கமாகத்தான் தமிழ் மக்கள் கண்டார்கள். அப்படியான ஓர் அரசாங்கத்துக்



கெதிராகப் போராட்டம் நடத்த முன் வந்த இளைஞர்களான போராளி இயக்கங்களுக்கு ஒத்தாசை வழங்கவேண்டிய நிலைமை அந்த மக்களுக்கு ஏற்பட்டது. காலப்போக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் திரு. அமிர்தலிங்கம், ரெலோ இயக்கத் தலைவர் திரு. சிறீ சபாரெத்தினம், ஈ. பீ. ஆர். எல். எவ். தலைவர் திரு. பத்மநாபா, புளொட் இயக்கத்தின் திரு. உமா மகேஸ்வரன் போன்றவர்களைக் கொலை செய்து ஈழப்போராட்டத்தின் ஏகபோக உரிமைக்கு எல்.ரீ.ரீ.ஈ.யினர் தம்மை ஆளாக்கிக் கொண்டதுடன் இந்தப் போராட்டத்தின் நோக்கமும் தன்மையும் மாற்றமடைந்தது. இந்த யுத்தம் மேலும் தமிழ் மக்களின் போராட்டமல்ல, எல்.ரீ.ரீ.ஈ.யினர் தமது நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்கான யுத்தம் என்ற நினைவு அந்த மக்களிடையே ஏற்பட ஆரம்பித்தது. 12 வருடங்களாக யுத்தத்தின் சாபத்தினால் தமிழ் மக்கள் பெரும் இன்னல்களுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் ஆளாகித்தான் இருந்தார்கள். அதனால் எப்படியாவது சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அத்தியாவசிய தேவை அவர்களுக்கு உண்டானது.

இனப்பிரச்சினை யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்குச் சிங்கள மக்களை வலியுறுத்தியது ஐக்கிய தேசியக் கட்சியின் திறந்த பொருளாதாரக் கொள்கையும் அதனால் ஏற்பட்ட இனவாத உணர்வுமாகும். இந்த இனவாதத்தினால் சர்வதேச ரீதியாக சிங்கள இனத்துக்கு அபகீர்த்தி ஏற்பட்டதுடன், தமது இளைஞர்களின் உயிர்களுக்கும் ஏனைய உடமைகளுக்கும் சேதம் ஏற்பட்ட அதே வேளையில், தன்னுடைய ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்த யுத்தம் பயன்படுத்தப் பட்டது. தொழில் வாய்ப்பை வழங்குகின்ற ஆகக்கூடிய செலவைக் கொண்டு இந்த யுத்தத்தைக் கொண்டு நடத்த ஐக்கிய தேசியக் கட்சி முயற்சி எடுத்தமையினால், சிங்கள மக்களுக்குக்கூட இந்த யுத்தம் தங்களுடைய யுத்தமல்ல என்ற ஒரு உணர்வு ஏற்பட ஆரம்பித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இந்த யுத்தத்தை நிறுத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருந்த ஒரு சந்தர்ப்பத்தில் தான் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தது. அதனால் தான் புதிய அரசாங்கத்துக்கு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான மக்கள் ஆணை கிடைத்தது. அதன் பிரகாரமே புதிய அரசாங்கம் சமாதானத்துக்கான நேசக்கரத்தை வடக்கை நோக்கி நீட்டியது.

என்றாலும், தமிழ்மக்களிடையே இருந்து கொடூரமான யுத்த சூழ்நிலையை வைத்துக்கொண்டு தங்களுடைய சிறு குழந்தைகளைக் குண்டுகளாகப் பயன்படுத்துகின்ற, சயனைட் அருந்தித் தற்கொலை செய்வது பெரும் வீரச் செயல் என்று இளைஞர்களுக்குப் போதிக்கின்ற தீவிரவாத எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்தினர் எமது நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த இடமளிக்காமல் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்தனர். அதனால் பாதுகாப்பு மட்டத்தில் யுத்தத்தை எதிர்நோக்கி, அதனை நீடித்துச் செல்ல விடாமல் கூடியவிரைவில் நிறுத்த வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த யுத்தம் தெட்டத்தெளிவாக ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்த சிங்கள இனவாதிகளைத் திருப்திப்படுத்துவதற்காக நடத்தப்படுகின்ற யுத்தமல்ல. தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை யுத்தத்தில் இருந்து பாதுகாப்பதற்காகத் தான் இன்று யுத்தம் நடத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. அதனால் இது ஒரு சமாதானப் போராக அமைந்துள்ளது. தமிழ் மக்களின் ஜனநாயக அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக நேர்மையாக அர்ப்பணிப்புடன், எல். ரீ. ரீ. ஈ. பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து முற்றுமுழுதாக இல்லாமல் செய்வது இந்த யுத்தத்தின் முக்கியமான நோக்கமாகக் கருதமுடியும். அர்த்தமற்ற யுத்தத்தினால் எமது நாட்டில் மனித வளமும் இயற்கை வளங்களும் அழிவதைத் தடுத்து நிறுத்தி, இந்த எல்லா வளங்களையும் இந்த நாட்டின் எல்லாப் பிரசைகளினதும் நன்மைக்கும் அவர்கள் நிலைத் திருப்பதற்கும் பயன்படுத்துவதே எமது இலட்சியமாகும்.



இந்த இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக நாம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத் தந்து, எல்.ரீ.ரீ.ஈ.யின் சித்தசுவாதீனமற்ற யுத்த மனோபாவத்தைத் தனிமைப்படுத்தி, தோல்வியுறச் செய்து, சிங்கள, தமிழ், முஸ்லிம் உட்பட எல்லா இன மக்களும் ஒன்றுபட்ட நாட்டில் ஒரே சம உரிமை கொண்ட பிரசைகளாக ஜனநாயக அரசியல் அமைப்பொன்றை ஏற்படுத்திக்கொண்டு வாழக்கூடிய பின்னணியை நாம் ஏற்படுத்துவோம்.


தென்னிலங்கையிலே சித்தசுவாதீனமற்ற யுத்த மனோ பாவத்தை முக்கிய அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்திய, ஊழல்களைக் கொண்ட அரசாங்கத்தைத் தோல்வியுறச் செய்வதற்கு வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய எல்லாப் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு கைகோர்த்துக் கொண்டார்கள். அதேபோன்று வடக்கில் தமிழ், முஸ்லிம் மக்களை தமது யுத்தப் பிடிக்குள் சிறை வைத்திருக்கின்ற எல். ரீ. ரீ. ஈ. யின் யுத்தமய நிலையைத் தடம்புரளச் செய்வதற்கு நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற வகையில் ஒன்றுபட்டுக் கைகோர்த்துக்கொள்ள வேண்டிய ஒரு சந்தர்ப்பம் இது.

**கடந்த 12 வருட காலமாக யுத்தத்தினால் நிர்மூலமாக்கப்பட்ட எமது தேசத்தை ஒற்றுமையாகக் கட்டியெழுப்புவதற்கும், இந்தச் சமாதானப் போரில் வெற்றி பெறுவதற்கும் உங்கள் அனைவரினதும் ஒத்தாசை அத்தியாவசியமாகின்ற ஒரு சந்தர்ப்பம் இது. சமாதானம் தானாகவே எங்களுக்குக் கிடைத்துவிடாது. அதை நாங்கள் வெற்றி கொள்ள வேண்டும். நீங்களும் நாங்களும் ஒன்று சேர்ந்து வெள்ளைத் தாமரை இயக்கத்தைப் பலப்படுத்துவதன் மூலம் நாம் அதனை வெற்றி கொள்ள வேண்டும்.**

www.tamilarangam.net



இப் புகைப்படத்தில் இடப்புறமிருந்து முறையே ரெலோ இயக்கத் தலைவர் திரு. ஸ்ரீ சபாரத்தினம், ஈ. பீ. ஆர். எல். எப். இயக்கத் தலைவர் திரு. பத்மநாப, எல். ரீ. ரீ. ஈ. இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன், ஈரோஸ் இயக்கத் தலைவர் திரு. பாலகுமார்.



இலங்கையின் தேசியச் செல்வமாகிய யாழ்ப்பாண நூல் நிலையத்தின் அழிவுக்குப் பின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



தற்போதைய தலைவி அன்று சமாதானத்திற்காகத் தமிழ் இயக்கங்களைச் சந்தித்தல்



காத்தான்குடி முஸ்லிம் பள்ளியினுள் இடம்பெற்ற மனிதக் கொலைகள்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



இனவாதிகளினால் அழிவுக்குட்பட்டது இந்தப் பொருட்கள் மட்டுமா ?



கொக்கட்டிச்சோலைக் கிராமத்தில் தமிழ்க் குடியிருப்பாளர்களைக் கொல்லுதல்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கல்அராவ மீனவக் கிராமத்தில் சிங்களக் குடியிருப்பாளர்களைக் கொலைசெய்தல்



புதிய அரசு அதிகாரத்துக்கு வந்ததும் எல். ரீ. ரீ. ஈ. இயக்கத்துடன் பேச்சு வார்த்தை ஆரம்பமாகியது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ச மா தா ன ப் போ ர்

# சமாதானம்

அன்றும் இன்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நில்லுங்கள் ! ஒரு கணம் நில்லுங்கள் !**

**இச்சிறிய விடயம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்!**

நாம் இங்கு பேசுவது உங்களின் எதிர்காலத்தைப் பற்றியல்ல. உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றியதாகும். உங்கள் பிள்ளைகளின் பிள்ளைகளது எதிர்காலம் தொடர் பானதாகும்.

இன்று வடக்கு – கிழக்குப் போர்முனையில் உயிரிழப்போர் உங்களது குழந்தைகள் அல்லவா? சிலவேளை உங்கள் சகோதரர்களாகவும் இருக்கலாம்.

இந்த துரதிஷ்டவசமான யுத்தத்தை எப்படியாவது நிறுத்திக்கொள்ள வேண்டாமா? இல்லையேல் உங்களது குழந்தைகளும், அக்குழந்தைகளின் குழந்தைகளும் யுத்தத் திற்குப் பலியாவதைத் தடுக்க முடியாமல் போய்விடும். அது கட்டாயமானதாக அமையும்.

அவ்வாறாயின் யுத்தத்தை நிறுத்தி அமைதியை எவ்வாறு நிலைநாட்ட முடியும்? அரசியல் தீர்வொன்றின் மூலம் மாத் திரமே சமாதானத்தை உருவாக்க முடியும். புலிகள் இயக் கத்தின் உறுப்பினர்கள் ஆயுதமேந்திப் போராடும்போது, என்ன சமாதானமென நீங்கள் நிச்சயமாகக் கேள்வியெழுப்பு வீர்கள். மேலெழுந்தவாரியாக நோக்குங்கால் அதில் உண்மை யுள்ளது போலத் தோன்றலாம். உண்மைதான். ஒரு பதியினர் போராடிக்கொண்டிருக்கும்போது, மறுபகுதியினர் சிறகு களை மடக்கிக்கொள்ளப்போவதில்லை. எனவே, இச்சந்தர்ப் பத்தில் யுத்தமானது கட்டடாயமானதொரு ஊடகமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனினும், ஆயுதமேந்தி உயிரைப் பணயம் வைத்துப் போராடும் நிலைக்கு; மற்றவரைக் கொன்று தன்னையும் அழித்துக் கொள்ளும் மனிதக் குண்டொன்றாக ஓர் இளைஞனை மாற்றக்கூடிய நிலை புலிகள் இயக்கத்திற்குச் சாத்தியமாகக் காரணம், தமிழ் மக்களுக்கு நியாயமான பல பிரச்சினைகள் இருப்பதனாலும், தொடர்ந்தும் அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்காமையினாலுமாகுமென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

எனவே, புலிகள் இயக்கத்தை யுத்த ரீதியாகத் தோல்வி காணச் செய்தாலும், தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றை முன்வைக்காதவரை நிலைத்திருக்கக்கூடிய சமாதானம் பற்றிய எதிர்பார்ப்பானது கானல் நீராகவே அமையும்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றைத் தேடும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டவர் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்க அவர்களாவார். அது பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையின் மூலமாகவேயாகும். இரண்டாவது முயற்சி மறைந்த பிரதமர் டட்லி சேனாநாயக்க அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அது டட்லி-செல்வநாயகம் உடன்படிக்கை மூலமாகும்.

எனினும், துரதிஷ்டவசமாக, சந்தர்ப்பவாத குறுகிய அரசியல் நோக்கம் காரணமாக அவ்விரு சந்தர்ப்பங்களும் நழுவிவிட்டன என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சட்டப்படியான முயற்சிகள், அரசியல் யாப்பு ரீதியான முயற்சிகள், சமாதான ஆர்ப்பாட்டங்கள் மூலமான முயற்சிகளினூடாக வந்த தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான போராட்டம் ஆயுதந்தாங்கிய இயக்கமாக மாறி, பயங்கரமான நிலைக்கு முன்னேறியது எப்போது? அது 1977 இல் இந் நாட்டின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்ற ஜே. ஆர். - பிரேமதாச நிர்வாகத்தின் கீழ் என்பதை விஷேடமாகக் கூற வேண்டியதில்லை.



வடக்கு-கிழக்கு இனப்பூசல்களை யுத்தமாக மாற்றி, அது உச்ச நிலையை அடைந்த அண்மைக்கால வரலாற்றில் சமாதானத்தை உருவாக்குவதாகக் கூறி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும், அம்முயற்சிகளுள் காணப்பட்ட அரசியல் நோக்கங்கள், தேவைகள் போன்றவற்றை ஆராயாமல் எதிர் காலத்தில் எந்தவிதமான சமாதானத்தையும் கட்டியெழுப்ப முடியாது.

## ஜே. ஆர். ஜயவர்தன காலப்பகுதி

ஜே. ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக்காலத்தின்போது, மூன்று சந்தர்ப்பங்களில் வடக்கில் நிலவும் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

முதல்முயற்சி, 1984 சனவரி மாதம் முதல் 1984 திசெம்பர் வரை நடைபெற்ற சர்வகட்சி மகாநாடாகும். இரண்டாவது 1985, ஜூலை 13 ஆந் தேதி முதல் 1985, ஆகஸ்ட் 17 ஆந் தேதி வரை நடைபெற்ற திம்பு பேச்சுவார்த்தையாகும். மூன்றாவது, இந்திய-இலங்கை உடன்படிக்கையாகும்.

இந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் விஷேடமாக முதல் இரண்டு சர்ந்தர்ப்பங்களிலும் வடக்கில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினை மாத்திரமே எனும் கருத்தினைத் தவிர்த்துக் கொள்ளாமலேயே ஜே. ஆர். ஜயவர்தன ஆட்சியானது செயற்பட்டது. மறுபுறத்தில் ஜயவர்தன ஆட்சிக்காலத்தில் 1977 இலும், 1979 இலும், 1983 இலும் தோன்றிய தமிழருக்கு எதிரான வன்செயல்களின்போது ஐ. தே. க. அரசாங்கம் தனது தந்திரமான அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள எத்தனித்தது என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும். இக் கலவரங்களை அடக்கும் போர்வையில் ஐ. தே. கட்சி அரசாங்கமானது அரசாங்கத்திற்கு எதிரானவர்களை அடக்கியாண்ட முறையும் அதற்காகப் பல்வேறு விதமான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்திய விதத்தையும் ஞாபகப்படுத்த வேண்டியது பொருத்தமானது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வேளையில் 1988 இல் நடைபெறவிருந்த சானதிபதி தேர்தலை இலக்காகக் கொண்டு ஐ. தே. கட்சி வேட்பாளரா வதற்கு முயற்சி செய்துகொண்டிருந்த திரு. ஆர். பிரேமதாச மாகாணசபைகள் சட்டத்தின்கீழ் பங்கிடப்படவேண்டிய தனக்குக் கீழிருந்த அமைச்சுக்களின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காமல் இந்திய எதிர்ப்புக்கான வித்துக்களை விதைத்துத் தனது நிலைப்பாட்டினைக் கட்டியெழுப்பப் பாடுபட்டார்.

## பிரேமதாச ஆட்சிக்காலம்

சனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடிய திரு. பிரேமதாச அச்சமயத்திலே புலிகள் இயக்கத்தை வன்மையாக அடக்கி யாண்ட இந்திய அமைதிகாக்கும் படையினரை இந்நாட்டி லிருந்து வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார். இராஜ தந்திர நெறிமுறைகளுக்குப் புறம்பாகச் சென்று அயல்நாட்டை இழிவுபடுத்திய பிரேமதாச, ஒரு புறத்தில் இந்தியாவின் பகைமையைச் சம்பாதித்துக்கொண்டதோடு, மறுபுறத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபையில் அதிகாரத்திலிருந்த ஈ. பீ. ஆர். எல். எப். இயக்கத்துடன் வெறுப்பு மனப் பாங்கை யும் ஏற்படுத்திக்கொண்டார்.

உண்மையிலேயே அது ஒரு சிறுபிள்ளைத்தனமான அரசியல் உபாயமாகவே அமைந்தது. புலிகள் இயக்கத்தின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்வதற்காகவே பிரேமதாச அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதன் பின்புதான் பிரேமதாச-பிரபாகரன் கீழ்த்தரமான தேன்நிலவு ஆரம்பித்தது. புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் கொழும்புக்கு வருகை தந்தனர். ஐந்து நட்சத்திர ஹோட்டல் களில் தங்கியிருந்தனர். சனாதிபதி பிரேமதாசவுடன் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஒரு வருடத்தை அண் மித்த காலப்பகுதிக்கு நீடித்த இப்பேச்சுவார்த்தைகளின் போதுதான் பிரேமதாச அரசாங்கமானது புலிகள் இயக்



சத்திற்கு பெருந்தொகையான பணத்தையும், பெருந்தொகை யான நவீன ஆயுதங்களையும், பஜிரோ ஜீப் வண்டிகளையும், தொகையான சீமெந்தையும் அன்பளிப்புச் செய்தது.

இவையனைத்தையும் பயன்படுத்திய புலிகள் இயக்க மானது, ஈ. பீ. ஆர். எல். எப். இயக்கத்தைத் தோல்வியடையச் செய்து மீண்டும் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தமது அதிகாரத்தை உறுதி செய்துகொண்டது. பிரேமதாசவுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தி லேயே புலிகள் இயக்கமானது அமிர்தலிங்கம் போன்ற ஏனைய தமிழ் அரசியல் அமைப்புக்களின் தலைவர்களைக் கொழும்பில் வைத்துப் படுகொலை செய்தது. மிகவும் தந்திரமான அரசியல் நோக்கத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் திரு. பிரேமதாச இவையனைத்தையும் செய்தார். அக்கால கட்டத்திலே அவர் செய்த, கூறிய விடயங்களின் மூலம் இது வெளிப்படையாகியது. கி. பி. 2000 ஆம் ஆண்டு வரை தானே பதவியிலிருப்பதாக பிரேமதாச அகந்தை கொண்டிருந்தது இந்நோக்கத்தை அடிப்படை யாகக் கொண்டதாகும்.

அந்நோக்கம் யாது? எவ்விதத்திலேனும் புலிகள் இயக்கத் தையும் பிரபாகரனையும் சந்தோசப்படுத்தித் தனது ஆட்சியின்கீழ் வடக்கு-கிழக்கு ஆட்சியின் பங்காளியாகப் பிரபாகரனை நியமிப்பதே அந்நோக்கமாகும். அதன்மூலம் பிரேமதாச எதிர்பார்த்தது என்னவெனில், 1994 இல் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்கு முகங்கொடுத்து, வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ்மக்களின் வாக்குகளை பிரபாகர னின் உதவியுடன் தனது வாக்குப்பெட்டிக்குள் போட்டுக் கொள்வதாகும். அதனூடாக மீண்டும் சனாதிபதிப் பதவியின் அதிகாரத்தை உறுதி செய்து கொள்வதாகும்.

“யார் நினைத்தார்கள் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருவார்களென்று. புலிகள் எனக்கு நம்பிக்கையானவர்கள்” போன்ற பெருமிதமான கூற்றுக்களைக் கூறிக்கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரேமதாச, அன்று புலிகள் இயக்கத்தின் தலைவர்களுடன் கொழும்பல் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நடாத்திய பேச்சுவார்த்தைகளில் பேசப்பட்ட விடயங்கள எவை, வாக்குறுதிகள் எவை என்பது இற்றைவரை பொதுமக்களுக்குப் பரம இரகசியமாகவே உள்ளது.

எனினும், இறுதியாக என்ன நேர்ந்தது? பிரேமதாசவின் வலையில் சிக்காதவகையில் புலிகள் இயக்கம் மதிநுட்பம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. இரண்டாவது ஈழப்போர் 1990 ஜூன் மாதத்தில் மீண்டும் ஆரம்பமானது. இந்த யுத்தமானது ஏறத்தாழ ஆயிரம் பொலிஸ், இராணுவ வீரர்களை முகாம்களுக்குள்ளேயே புலிகள் இயக்கத்திற்குப் பலிகொடுத்த தன் மூலம் ஆரம்பிக்கப்பட்டது. புலிகள் இயக்கத்திற்குப் பதிலடி கொடுக்காமல் முகாம்களுக்குள்ளேயே தங்கியிருக்குமாறு பிரேமதாச விடுத்த பணிப்புரை இதற்கு வழிவகுத்தது. இவ்வகையில் புலிகள் இயக்கத்தினால் கைது செய்யப்பட்ட பெருந்தொகையான படையினர் இன்றும் புலிகள் இயக்கத்தின் முகாம்களில் இன்னலுறுகின்றனர்.

என்ன நிகழ்ந்தது? "உணவளித்த கையயையே கடித்துவிட்டான்" எனக் குறைகூறும் நிலை மாத்திரமே பிரேமதாசவுக்கு உருவானது. இறுதியில் யுத்தம் கட்டாயமான தொன்றாகியது. தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் அதிலிருந்து தோன்றிய போராட்டத்தையும்பயன்படுத்தித் தனது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பிரேமதாசவுக்கு இறுதியில் புலிகள் இயக்கத்தின் மூலமாகவே சாவுமணி அடிக்கப்பட்டது.

பிரேமதாசவின் மறைவின் பின் சனாதிபதியாகப் பதவியேற்ற டி. பி. விஜேதுங்கவின் ஆட்சியானது, புலிகள் இயக்கத்திற்கு மீண்டும் ஏணியை அமைத்துக்கொடுக்கக்கூடிய வகையிலேயே அமைந்தது. "வடக்கில் பயங்கரவாதப் பிரச்சினையே நிலவுகிறது. அங்கு இனப்பிரச்சினை கிடையாது" என டி. பி. விஜேதுங்க உறுதியாகக் கூறினார்.



"இக்கற்பகாலம் நிலவும் வரை ஈழம் கொடுக்கமாட்டேன்" என ஒரு முறை அவர் கூறினார்.

முழுநாட்டையும் மக்களையும் யுத்த சூழ்நிலைக்குத் தள்ளிய டி. பி. விஜேதுங்க, வடக்கு-கிழக்கின் தமிழ்மக்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லையென்றவாறே செயலாற்றினார்.

இந்த யுத்த மனோபாவத்தில் நாடு சென்றுகொண்டிருந்த வேளையில், தென்மாகாணசபைத் தேர்தலோடு அப்போது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் நெறிப்படுத்தலின் கீழ் யுத்த எதிர்ப்பு, இனவாத எதிர்ப்பு, அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான ஒரே தீர்வு அமைதியான அரசியல் தீர்வாகும் என்பதை வலியுறுத்திய அரசியல் சூழ்நிலையொன்று உருவாகியது. 1994 ஆகஸ்ட் பொதுத் தேர்தலின்போதும் சந்தரிகா சமாதானத்திற்காகவே குரலெழுப்பினார். எதிர்த்தரப்பிலிருந்த இனவாதச் சக்திகளைச் செயலிழக்கச் செய்து தென்மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலில் உறுகுணை சிங்கள மக்களிடையே தேசிய ஒற்றுமையை வலியுறுத்தி, அவர் அமோக வெற்றியினைப் பெற்றார். 1994, சனாதிபதித் தேர்தலின்போதும் அவர் அந்த நிலைப்பாட்டிலேயே உறுதியாக இருந்தார்.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால வரலாற்றை நோக்கும்போது, நாட்டிலே இனப்பிரச்சினை தலைதூக்கியிருந்த சந்தர்ப்பமொன்றில் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக இனவாத நிலைப்பாட்டினை ஒதுக்கிச்சென்று, அதனை நிராகரித்து, தமிழ்மக்களின் நியாயமான பிரச்சினைகளையும் உரிமைகளையும் ஏற்றுக்கொள்வதாகக்கூறி, அதற்குத் தீர்வு காண்பதற்கான அரசியல் நடைமுறையைச் செயற்படுத்த மக்களின் ஆணையை வேண்டிநின்ற முதலாவது சிங்கள அரசியல் தலைமைத்துவம் சந்திரிகாவினுடையது என்பது சாலப்பொருந்தும். 12 வருடகால கொடிய யுத்தத்தின் பிடியில் சிக்கித்தவித்த நாட்டின் சிங்கள, தமிழ் சகல மக்கள்

www.tamilarangam.net

சமூகத்தினரும் ஏகோபித்த வகையில் சந்திரிகாவுக்கு அதிகாரத்தை அவரது வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு ஏற்றதன் மூலம் வழங்கினர்.

புலிகள் இயக்கத்தின் கட்டளைகளுக்கு அடிபணியாத வடக்கு-கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் சனாதிபதித் தேர்தலின் போது எமது நாட்டின் சகல பகுதிகளையும் மீறிச் சென்று, சில தேர்தற்றொகுதிகளில் 99 சதவீதமான வாக்குகளைப் பெற்றுக்கொடுத்து, சந்திரிகாவின் வெற்றியை உறுதி செய்தமைக்கான காரணம், தமது பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தந்து கொடிய யுத்தத்தின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள அவரது நிர்வாகமே ஒரே வழி என நம்பியமையேயாகும்.

சனாதிபதித் தேர்தலில் ஐ. தே. கட்சி வேட்பாளரான காமினி திசாநாயக்க படுகொலை செய்யப்பட்டபோது, ஐ.தே. கட்சி உட்பட எதிர்கட்சியினர் அதற்குச் சந்திரிகாவே பொறுப்புக்கூறவேண்டுமெனக் குற்றச்சாட்டுக்களை விடுத்த வேளையில், அத்துடன் மாத்திரம் நின்றுவிடாமல் ஐ. தே. கட்சியின் தேர்தல் நடவடிக்கை முற்றுமுழுதாக இனவாத நிலைப்பாட்டிலிருந்து இயக்கப்பட்ட வேளையில், அவற்றுக்கு முகங்கொடுத்த சந்திரிகா தனது அரசியல் நிலைப்பாட்டில் தளராது இருந்தார்.

மக்களின் பிரதிபலிப்பானது பாரிய வகையிலேயே அமைந்தது. சனாதிபதித் தேர்தல் வரலாற்றில் எந்தவொரு வேட்பாளரும் பெற்றிராத வாக்குகளின் எண்ணிக்கையையும் மேலதிக வாக்குகளின் எண்ணிக்கையையும் பெற்றுக் கொண்ட சந்திரிகா சனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

சந்திரிகா பெற்றுக்கொண்ட இவ்வெற்றியின் ஒருசில விசேட அம்சங்களவான :

01. தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்றினை முன்வைப்பதற்காக வாக்குறுதியளித்து அதனைப் பெற்றுக்கொண்டமை.



02. அத்தீர்வானது அதிகாரப் பரவலாக்கல் மூலம் மாத்திரமே பெறப்படமுடியுமென வலியுறுத்தியமை.

03. சிங்கள இனவாதத்தைப் போலவே தமிழ் இனவாதத் தையும் உறுதியாக நிராகரித்தமை.

சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற சந்திரிகாவின் முதல் முயற்சியாக அமைந்தது யாதெனில், ஏற்கனவே வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தனது அதிகாரத்தை நிலை நாட்டியிருந்த புலிகள் இயக்கத்தை சமாதானப் பாதையில் பிரவேசிக்கச் செய்வதாகும். அதன்பொருட்டு செயலாற்றிய அவர், வடக்குக்கு கொண்டு செல்லத் தடைவிதிக்கப் பட்டிருந்த 28 வகை பொருட்களுக்கான தடையினை நீக்கி, புலிகள் இயக்கத்தின்பால் தனது சமாதானத்திற்கான நேசக்கரத்தை நீட்டினார். அதன் பிரதிபலிப்பாக புலிகள் இயக்கத்தினர் தம்மால் கைது செய்யப்பட்டிருந்த படைவீரர் களுள் ஒரு சிலரை விடுதலை செய்தனர்.

அதன்பின் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை அரசாங் கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் பட்டன. பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள யாழ்ப்பாணம் சென்ற பிரதிநிதிகள் குழுவினரை வரவேற்பதற்காகக் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான வடபகுதி மக்கள், அச்சந்தர்ப்பத்திலே சமாதானம் தொடர்பான தமது எதிர் பார்ப்புக்களையும் அக்கறையினையும் தெளிவாக வெளிக் காட்டக்கூடியவர்களாக இருந்தனர்.

மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் புலிகள் இயக்கமானது பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகிச் செல்வதற்கான வழிவகை களைத் தேட ஆரம்பித்தது. அதற்கான காரணம் யாதெனில், அதுவரை ஆயுதப் பலத்தின் மூலம் தமது மக்களிடையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்த புலிகள் இயக்கத்தின ருக்கும் அதன் தலைவரான பிரபாகரனுக்கும் வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களிடமிருந்து தோன்றிய தாக்கத்தின் நிமித்தமேயன்றி வேறொன்றுமல்ல.

சந்திரிகாவின் சமாதான முயற்சி நேர்மையான தொன்றென்பதையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத் தரக்கூடிய ஒரே சிங்களத் தலைவி சந்திரிகாவே என்பதையும், சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் பேரழிவு ஏற்படுவதைத் தடுக்கமுடியாதென்பதை யும் வடக்கு – கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் உணர்ந்தமையால் சந்திரிகா அரசாங்கத்துடன் அரசியல் தீர்வொன்றுக்கு வருமாறு அவர்கள் புலிகள் இயக்கத்தைக் கட்டாயப்படுத்தும் நிலை உருவாகியதனால் இத்தாக்க நிலை உருவாக முக்கிய காரணமாக அமைந்தது.

அரசியல் தீர்வொன்றுக்காக முன்னின்றதனாலும், தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளனவென்பதை ஏற்றுக் கொண்டதனாலும், பொருட்களுக்கான தடையை நீக்கி அதுவரை மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்திற்குப் பிர வேசிக்கும் பூநகரி, ஆனையிறவு பாதைகளைத் திறந்து விட்ட தன் மூலம் அரசியல் தீர்வொன்றுக்கான தனது அர்ப் பணிப்பை வெளிக்காட்டியதனாலும் தமிழ் மக்களிடையே சந்திரிகா பிரபல்யமடைந்ததையும் நம்பிக்கையைப் பெற்றதை யும் சகித்துக்கொள்ள முடியாத புலிகள் இயக்கமானது, தனது சொந்த நிலைப்பாட்டின் நிமிர்த்தம் ஒரு தலைப்பட்ச மாக யுத்தத்தில் பிரவேசித்தது.

தற்போது புலிகள் இயக்கத்தினருக்கும் படையினருக்கும் இடையே போர் மூண்டுள்ளது. எனினும், இந்தத் தடவை யுத்தம் ஆரம்பித்ததன் பின் விசேடமான நிலையொன்று தோன்றியுள்ளது. அது என்ன ? ஜயவர்தன ஆட்சிக் காலத்தி லும் பிரேமதாச ஆட்சிக் காலத்திலும் பின்பு விஜேதுங்க ஆட்சிக் காலத்திலும் புலிகள் இயக்கத்திற்கும் இலங்கை



அரசாங்கத்திற்கும் இடையில் மூண்ட யுத்தங்களின்போது, உலக மக்களின் குற்றச்சாட்டானது இலங்கை அரசாங்கம் மீதே சுமத்தப்பட்டிருந்தது. இலங்கையின் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்கள், சிறுபான்மை இனத்தவரான தமிழர்களைத் துன்புறுத்துகின்றனரென்பதையும், தமிழ் மக்களின் மனித உரிமைகள் மீறப்படுகின்றதென்பதையும், பாதுகாப்புப் படையினர் அப்பாவித் தமிழ் மக்களைக் கொலை செய்கின்றனரென்பதையும் கூறி, அவ்வேளையில் உலக மக்கள் இலங்கை அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டினர்.

இதற்கு முந்திய சகல சந்தர்ப்பங்களிலும் புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக மேற்கொண்ட பிரசாரங்களின் மத்தியில் இலங்கை அரசாங்கம் நிர்க்கதியானது. அவ்வாறு நிகழ்ந் தமைக்கான காரணம், அவ்வச் சந்தர்ப்பங்களிலே இலங்கை அரசாங்கம் செயற்பட்ட விதமானது தெளிவற்றதான நிலை யினதாக இருந்தமையேயாகும்.

இலங்கையில் நிலவுவது பயங்கரவாதப் பிரச்சினையே யன்றி, தமிழ் மக்களின் பிரச்சினையல்லவென அச்சந்தர்ப் பத்தில் அதிகாரத்திலிருந்த அரசாங்கங்கள் கொண்டிருந்த நிலைப்பாடுகள் காரணமாக இலங்கை அரசாங்கமும் சிங்கள மக்களும் மிலேச்சத்தனமானவர்களென புலிகள் இயக்கத்தினர் காட்டிய குற்றச்சாட்டுக்களின் மூலம் உலக மக்களின் கருணையினையும் ஒத்துழைப்பினையும் தம்பக்க மாக இழுத்துக் கொள்ளக்கூடிய வகையில் புலிகள் இயக்கத் தினர் பயன்படுத்திக் கொண்டனர்.

இந்தத் தடவை யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதன் பின் புலிகள் இயக்கத்தினருக்குத் தமது வழமையான விளையாட்டி னைச் சர்வதேச ரீதியாக நடத்திச் செல்லக்கூடிய வாய்ப்புக் கள் இல்லாதொழிந்துவிட்டது. இதற்குக் காரணம் சமாதான முயற்சியில் சந்திரிகா பிரவேசித்த முறையும் அதில் சந்திரிகா வின் அரசாங்கம் கடைப்பிடித்த நிலைப்பாடுமேயன்றி வேறொன்றுமில்லை.

www.tamilarangam.net

சந்திரிகா அரசாங்கத்தின் இந்நிலைப்பாடானது மிகவும் வெற்றிகரமான சிங்கள, தமிழ், மக்களின் மனதிற் பதிந்தது. சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியின் போதும் யுத்தம் ஆரம்பமானதன் பின்பும் இந்தத் தடவை யுத்தமானது பலாத்காரமாக புலிகள் இயக்கத்தினரால் திணிக்கப்பட்டதெனும் குற்றச்சாட்டினை முன்வைத்து உடனடியாக சமாதானப் பாதையில் பிரவேசிக்குமாறு இருதரப்பினரையும் கட்டாயப்படுத்தியே யுத்தத்திற்கு எதிரான பொதுமக்கள் ஒன்றுதிரண்டனர்.

உலகின் பல்வேறு நாடுகளும் அமைப்புகளும் இந்நிலைப் பாட்டினை ஏற்று அறிவித்தல்களை விடுக்கத் தொடங்கின. இதுவரை காலமும் தாம் கட்டியெழுப்பிய நற்பெயரைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலை புலிகள் இயக்கத்திற்கு உருவாகியது. புலிகள் இயக்கமானது எவ்விதத்திலும் எதிர்பாராத வகையில் சர்வதேச ரீதியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட ஆரம்பமாகியுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் மாத்திரமன்றி, ஐரோப்பிய ஒன்றியம், அம்னெஸ்ரி அமைப்பு போன்றவை கூட புலிகள் இயக்கத்தின் மீது குற்றஞ்சுமத்தி யுள்ளன.

தமிழ்மக்களுக்கு நியாயமான பிரச்சினைகள் உள்ளன வென்பதைச் சந்திரிகா அரசாங்கம் உறுதியாக ஏற்றுக் கொண்டதனாலும் அதற்கு அரசியல் தீர்வொன்றின் அவசியத்தை வலியுறுத்தியமையினாலுமே இத்தகைய சாதகமான சூழ்நிலையைப் பெற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கத்திற்கு இயலுமான நிலை உருவாகியது.

மேற்கூறப்பட்ட சகல நிலைமைகளுடன் சமமான முக்கியத் துவம் பெறுவது யாதெனில், சந்திரிகா அரசாங்கம் மீது சாதாரண தமிழ் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையைத் தொடர்ந்தும் அவ்வாறே தேக்கிவைப்பதில் அரசாங்கம் வெற்றிகண்டமையாகும். புலிகள் இயக்கத்தால் தாங்கிக் கொள்ள முடியாத இவ்விடயத்தின் மத்தியில் அவர்களது தலையாய நோக்கமாக அமைவது, தமிழ் மக்களிடையே



சந்திரிகா அரசாங்கத்தின் மீது விரக்தி நிலைமையை ஏற்படுத்துவதாகும். யுத்தத்தினால் இன்னலுற்ற தமிழ் மக்கள் பொதுவாக சமாதானம் பற்றிய எதிர்பார்ப்புக் களைக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

விஜயகுமாரதுங்க யாழ்ப்பாணத்திற்கு அன்று விஜயம் செய்திருந்த வேளையில் அதனால் தான் தமிழ் மக்கள் அவரை அன்புடன் வரவேற்றனர். 1982 சனாதிபதித் தேர்தலில் ஸ்ரீ. ல. சு. க. சனாதிபதி வேட்பாளரான ஹெக்டர் கொப்பேகடுவவை வெற்றியீட்டச் செய்து (தென் பகுதியில் சிங்கள மக்கள் ஜயவர்தனவை வெற்றியீட்டச் செய்தபோது) சமாதானம் தொடர்பான தமது அபிலாசைகளை வெளிக் காட்டினர். இவ்வருட ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் நோக்கிச் சமாதான பாதயாத்திரை மேற்கொண்டவர்கள் சென்ற வேளையிலும் தமிழ்மக்கள் தமது நேசக்கரத்தை நீட்டினார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இந்நிலையை மாற்றுவதற்கான ஒரே மார்க்கம் தென்பகுதியில் இனவாத கலவரங்களைத் தோற்றுவித்து நாட்டின் தென்பகுதியில் வாழும் தமிழ் மக்களைத் துன்புறுத்தி, அவர்களது சொத்துக்கள், உயிர்களை அழித்து இனவாத கலவரங்களுக்கான பொறுப்பினை அரசாங்கம் மீது சுமத்தி, சந்திரிகா அரசாங்கமும் இனவாதமுடையதென்பதைத் தமிழ் மக்களிடையே வேரூன்றிச் செய்து அரசாங்கத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைச் சிதைத்துவிடுவதாகும்.

கிராமங்களைத் தாக்குதல், திம்புலாகல பிக்கு போன்ற மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள பிக்குமார்களைப் படுகொலை செய்தல் போன்ற செயல்களில் புலிகள் இயக்கம் ஈடுபடுவதற்கான காரணம், தென்பகுதிகளில் கலவரங் களைத் தோற்றுவிப்பதற்காகவேயாகும்.

எனவே, இத்தகைய கண்ணிகளில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பதன்மூலம் பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பதிலும், புலிகள் இயக்கத்தைத் தமிழ் மக்களிடமிருந்து தனியாகப் பிரித்துவைப்பதிலும் இனவாதக் கலவரங்களைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தவிர்த்துக் கொள்ள வேண்டியது அத்தியாவசியமான காரணியாகும். அவ்வாறின்றேல் நாம் புலிகளின் வலையில் சிக்கிக் கொண்டவர்களாவோம்.

எனினும், சமாதானம், சமாதானம் என்று முணு முணுத்துக் கொண்டிருப்பதன்மூலம் மாத்திரம் புலிகள் இயக்கத்தை தமிழ் மக்களிடமிருந்து பிரித்து வைப்பது இயலாத காரியமாகும். அது தொடர்பாக துரிதமாகச் செயற்பட வேண்டும். தமிழ் மக்கள் சந்திரிகா அரசாங்கம் மீது ஏதேனும் நம்பிக்கையைக் கொண்டிருப்பின் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வினைப் பெற்றுத்தரக்கூடிய வகையில் அதிகாரத்தைப் பரவலாக்க நடவடிக்கை மேற்கொள்வதன் மூலமே அதனை உறுதிசெய்ய முடியும்.

1995, சனவரி 06 ஆந் தேதியன்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய சனாதிபதியவர்கள் இவ்விடயம் தொடர்பாக மிகவும் வலியுறுத்தியுள்ளார். 56 இல் அதிகாரத்திற்கு வந்த தனது தந்தை பிராந்திய சபை முறையினூடாக அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் முறையொன்றில் பிரவேசித்தமையைக் குறிப்பிட்ட சனாதிபதியவர்கள், தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வொன்றைத் தேடும்போது மறைந்த பண்டாரநாயக்க அவர்கள் எடுத்த வழிமுறையை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறினார்.

ஒருபுறத்தில் யுத்தம் நிகழும்போது மறுபுறத்தில் அதற்குச் சமமான வகையில், உண்மையிலேயே அதைவிட வேகமாக அரசியல் தீர்வினைக் காண வழிசமைத்துக்கொள்ள வேண்டும். சிவில் அமைப்புக்கள், வெகுசன அமைப்புகள், அரசியல் கட்சிகள், குழுக்களிடையே இவ்விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்படல் வேண்டும்.

இன்று எமது நாடு அத்தகைய தீர்மானமெடுக்க வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சந்தர்ப்பவாத, இனவாதச் சிறு கூட்டத்தினர் எத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைப்பினும் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்த வேண்டும்.



அன்று எமது நாடு றுகுணு, மாயா, பிஹிட்டி என் மூன்று பிரிவாக வகுக்கப்பட்டே நிர்வகிக்கப்பட்டது. அவ்வப் பகுதிகளின் தேவைகளுக்கிணங்க இளவரசர்களை நியமித்து அவ்வப் பகுதிகளின் நிர்வாகம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தமைக்கான வரலாறு இதற்கு சான்று பகர்கின்றது.

வரலாறு அவ்வாறிருப்பின் தத்தமது தனித்துவத்தைப் பேணிப் பாதுகாத்து, கலாசாரப் பெறுமதிகளைப் பாதுகாத்து, சிங்கள, தமிழ், முஸ்லிம் இனக்குழுக்களின் விருப்பத்திற்கிணங்க செயற்படக்கூடிய ஐக்கிய இலங்கையினுள் பிராந்திய ஆட்சி முறையொன்றினை உடனடியாக அறிமுகம் செய்தல் வேண்டும்.

அவ்வாறின்றி யுத்தத்தின்மீது மாத்திரம் நம்பிக்கை வைத்துச் செயற்படுவோமேயானால் வெற்றிவாகை சூடினாலும் அது தற்காலிகமானதொன்றாகவே அமையும். இங்கு ஒரு விடயத்தை வலியுறுத்த வேண்டும். நாம் யுத்தத்தை வழுக்கிவிழச் செய்யவோ, அல்லது யுத்தத்திற்கு எதிராகவோ முயற்சி செய்வில்லை. தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்திய பாசிசவாத புலிகள் இயக்கத்தைக் கட்டாயமாக யுத்தமுனையில் தோல்விகாணச் செய்ய வேண்டும்.

எனினும், அத்தகைய யுத்தம் புலிகள் இயக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படுவதேயன்றி தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுவதொன்றல்ல என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. யுத்தத்தின் பின்னால் மறைந்திருந்து சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட முயற்சிக்கும் கீழ்த்தரமான இனவாத அரசியல்வாதிகளுக்கும், அவர்களுக்குப் பணிவிடை செய்து இறுதித் தமிழன்வரை கொலை செய்யப்படல் வேண்டுமென்ற மிருகத்தனமான கருத்துக்களுக்கு அடிமையாகி சிங்களவன் மாத்திரமே எனத் தற்பெருமைப் பேச்சுக்களைப் பேசும் கலாநிதிகள், பேராசிரியர்கள் போன்ற சிந்தனையாளர்களுக்கும் இடமளிக்கக் கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் இனவாதத்தைத் தத்துவமாகக் கொண்டு தனது மிலேச்சத்தனத்தை மூடிமறைக்க புலிகள் இயக்கத்திற்கு இடமளிக்கக்கூடாதது போலவே சிங்கள இனவாதிகளுக்கும் இடமளிக்கக்கூடாது. புலிகள் இயக்கத்தை யுத்த ரீதியாக தோல்விகானச் செய்து அரசியல் தீர்வொன்றை முன்வைக்க வேண்டுமெனப் பறைசாற்றும் இத்தகைய கீழ்த்தரமான இனவாதிகளின் முயற்சியானது மென்மேலும் தமிழ் மக்களைப் புலிகள் இயக்கம் மீது தள்ளிவிட்டு நீடிக்கும் யுத்தமொன்றை உருவாக்குவதற்கு உதவுவதாகவே அமையும். அதன் மூலமாக இனவாதத்தின் பின்னால் மறைந்துள்ள யுத்தக் கருவிகளின் வியாபாரிகளுக்குத் தமது வியாபாரத்தை நடாத்திச் செல்ல இடமளிப்பதாகும்.

யுத்தம் நடைபெறும் சந்தர்ப்பத்திலேயே அதற்குச் சமமாக அல்லது அதைவிட வேகமாக அரசியல் தீர்வொன்றை முன்வைத்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமாக தமிழ் மக்களிடையே சந்திரிகாவின் அரசாங்கம் கட்டியெழுப்பியுள்ள நம்பிக்கையை மென்மேலும் உறுதி செய்து தமிழ் மக்களைப் புலிகள் இயக்கத்தின் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியுமென்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

**நிலைத்து நிற்கக்கூடிய சமாதானமொன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டுமெனில், சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் உட்பட சகல சமூகத்தினருக்கும் நன்மதிப்பையும் சம உரிமைகளையும் பெற்றுத் தரக்கூடிய விரிவான தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நோக்கிச் செல்ல வேண்டும். இன்று நிலவும் யுத்தத்திற்கு ஒரே காரணமான மக்களிடையே நிலவும் சந்தேகம், நம்பிக்கையின்மை போன்றவற்றை அப்போதுதான் எம்மால் ஒழித்துவிட முடியும்.**

www.tamilarangam.net

சமாதானப் போராட்டம்

"சமாதானத்தால் சமாதானத்தை உருவாக்கிக்கொள்ள முடியாதுவிடின், வேறு எந்த வழியிலாவது சமாதானத்தை உருவாக்கிக்கொள்ள எங்கள் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெளிவாக அறிவிக்கின்றேன். எங்கள் யுத்தம் சமாதானத்துக்கான ஒன்றே. எங்கள் யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல என்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் உட்பட இலங்கையின் அனைத்து மக்களும் மனப்பூர்வமாக எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வுக்காகவும் சமாதான விரோதிகளுக்கு எதிராகவுமே நாம் இன்று யுத்தம் புரிகின்றோம்."

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

1995, மே 22.

---

இன உறவு அலுவல்கள், தேசிய நல்லிணக்க அமைச்சிற்காக
அரசாங்க அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்